# செந்தமிழ்

தொகுதி 88 ஜூன் 94 பகுதி 2

காலாண்டு இதழ்

ஆசிரியர் மா. தனுக்கோடி பாண்டியன் பி.ஏ.,பி.எல்.

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை-1.

பொறுப்பாசிரியர் : பேராசிரியர் பேரறிஞர்

நா. பாலுசாமி எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்.டி.,பி.எட்.

# பொருளடக்கம்


பக்கம்

1 சண்டேசுவரர் (தொடர்ச்சி)
பேரறிஞர் அ. மா. பரிமணம் 1

2. சோழர் கல்வெட்டு பொறித்த துர்க்கை ஊர்தி
வெ. வேதாசலம் 14

3. ஏனை மருட்பா
பேரறிஞர் சா. கிருட்டிணமூர்த்தி 18

4. நேமிநாதம் (சொல்லிலக்கணம்)
பேரறிஞர் பெ. சுயம்பு 22

5. பொழுதும் திணையும் - புதியபார்வை
கானகர் ச. பாலகதிரேசன் 37

# சண்டேசுவரர்

— பேரா. அ. மா. பரிமணம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

தாம் விளக்க முற்படும் நாயன்மார்கள் ஊர், பேர், குலம் போன்ற பலவற்றின் உண்மைத் தன்மையைச், சான்றுகள் வாயிலாக உறுதி செய்து கொண்ட பின்னரே தம் வரலாற்றுக் காப்பியத்தில் புலப்படுத்தும் சேக்கிழார், அவர்களின் காலம் பற்றிய விவரங்கள் தருவதில் அதிகமாக ஈடுபடவில்லை என்று கருதலாம். ஆனால், நாயன்மார் பலருடைய வரலாற்றைக்கூர்ந்து நோக்குவார்க்கு அவர்களின் காலத்தை உய்த்துணரக் கூடிய குறிப்புக்களைத் தம் நூலில் தந்து சென்றுள்ளார் என்பதில் ஐயமெழாது. சண்டேசர் வரலாறு சம்பந்தரைக் கவர்ந்த தன்மை அவரைப்பற்றித் தம்பதிகங்களில் குறிப்பிட்டுள்ளமை கொண்டு அறியலாம். 'கடிசேர்ந்த' எனத் தொடங்கும் திருப்பாடலில் அவர், 'சண்டீசர் செயல் பண்டு நிகழ்ந்தது' என்றும், அதனை அறிவார் சொலக் கேட்டு அறிந்தோம் என்றும் கூறியிருப்பது சேக்கிழாரின் கவனத்தைக் கவர்ந்துள்ளது. சண்டேசநாயனார் புராணத்தில் அவர் காலம் பற்றியோ, அதன் தொன்மை பற்றியோ குறிப்பிடாத சேக்கிழார், திருஞானசம்பந்தர் புராணத்தில் பிள்ளையார் சமணரொடு புனல் வாதத்திலீடுபட்ட போது பாடப்பட்ட பதிகப்பாடல்களின் நுண் பொருட்களை விளக்குகையில் 'கடிசேர்ந்த' என்னும் பாடலை நினைவு கூர்ந்து,

கருதும் கடிசேர்ந்த எனுந்திருப்பாட்டில் ஈசர்
மருவும் பெரும் பூசை மறுத்தவர்க்கோறல் முத்தி
தருநன் மையதாதல் சண்டீசர்தம் செய்கை தக்கோர்
பெரிதும் சொலக்கேட்டனம் என்றனர் பிள்ளையார்தாம்

(பெ.பு,சம்.839)

என்று குறிப்பிட்டுள்ளார். இதனால் சண்டீசர் சிறப்போடு, அவரது காலத் தொன்மையும் பற்றிய பிள்ளையார் கருத்து சேக்கிழாரைக் கவர்ந்துள்ளமை புலனாகின்றது.

தமிழ்மொழியின் பக்தி இலக்கிய வரலாற்றில் 'பதிகநெறியை, முதன் முதலில் தோற்றுவித்த பெருமை காரைக்

காலம்மையாரைச் சாரும் என்பதில் ஐயமின்று. பெரிய புராணம் பேசும் அறுபான் மும்மை நாயன்மார்களுள் காலத்தால் முற்பட்டவராகச் சண்டீசரைக்கொள்ளலாம் என்னும் கருத்து சிந்திப்பதற்குரியதாகும்.

சண்டேசுவரர் பிறப்புத்தலமான சேய்ஞலூரும் அங்குள்ள கோயிலும் பழமை வாய்ந்தன. முருகப்பெருமான் சூரனை வதைத்தற்பொருட்டு வீரமகேந்திரம் செல்லுங்கால், சேய்ஞூரில் தங்கிச்சிவபூசை புரிந்தாரெனக் கந்தபுராணம் கூறுகின்றது. அவருக்கு இதமாக விளங்கிய காரணத்தால் அத்தலம் சேய்+நல்லூர் என்றாகிப் பின் சேய்ஞலூர் என வழங்கப்பட்டது என்று பௌராணிக மரபில் ஊர்ப்பெயர் விளக்கம் செய்வர். சேய் ஆகிய சண்டேசுவரர் தோன்றியமையால் அவ்வாறு பெயர் பெற்றது என்று குறிப்பிடுவாருமுளர். முக்கட்செல்வர்தம் சேயர் மூவருள் இறுதியாமவர் (சண்டேசர்) அவதரிப்பதற்கு, இடைப்பட்டவரான முருகப்பெருமான் ஆதரித்துத் தங்கிய இடம் காரணமாக அமைந்தது போலும் எனும் எண்ணம் நயமாகவுள்ளது! ஊர்ப்பெயர்க் காரணம் எதுவாயினும் சேய்ஞலூர் மறைபயில் அந்தணர் மன்னி வாழ்ந்த தொன்மைச் சிறப்புடையது என்பது உறுதி. சேய்ஞலூரை அடுத்துள்ள ஆப்பாடி இன்று அப்பர் பாடிய அருந்தலமாக விளங்கினாலும் சண்டேசுவரர் காலத்தில் அங்குத் திருக்கோயில் இருந்ததாகக் கருதுவதற்கில்லை; பெரியபுராணத்தில் அத்தகு குறிப்புக்காணப்படவில்லை. சேய்ஞலூர்ப்பிள்ளையார் காலத்தில் அந்த ஆற்றங்கரைப்பகுதி, ஆக்கள் மேய்த்தற்குரிய புறவாக-பாடியாகவே இருந்துள்ளது. தாம் புரந்த பசுக்கள் வளம்மிக்குக் கறவாமே பால்சொரியும் காட்சி கண்டு, பிள்ளையார், அதனைப் பெருமானுக்கு திருமஞ்சனமாக்கும் நினைவொடு, மண்ணி மணற் புளினக்குறையில், ஆத்திமரத்தின் கீழ், மணலால் திருமேனியும், சிவாலயமும், கோபுரமும், சுற்றாலயம முதலியனவும் உருவாக்குகின்றார். அங்கு முன்னரே திருக்கோயில் இருந்திருக்குமாயின் இம்மணற் கோயில் முயற்சியும் மணல் இலிங்கத்தாபனமும் நாடோறும் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டிராதிருக்கு மன்றோ. சிவபூசனைக்குத்தடையாய தாதையின் தாள்களைத் தடிந்து, பின்னர் அது பற்றிக் கவலாது சிவபூசையைத் தொடர முற்பட்ட அப்போது இறைவன் தேவியுடன் தோன்றிச் சண்டீசபதம் நல்கிப் பிற சிறப்புக்களையும் அருள்கின்றார். பின்னர் அந்த இடத்தில்

திருக்கோயிலும், ஊரும் தோன்றியிருத்தல் வேண்டும். அதன் பின்னர்ச் சேய்ஞலூர்ப் பிள்ளையாராகிய சண்டேசுவரர், அங் கிருந்தே தம் தொண்டினைத் தொடர்ந்து செய்துவர, காலப் போக்கில் அக்கோயில் கற்றளியாக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதனையே பின்னர் வந்து வழிபட்ட அப்பரடிகள் பாடுவாரா யினர். இன்று ஆப்பாடிக்கோயில் இருந்த இடம் சேய்ஞலூர்ப் பிள்ளையார் சண்டேசராகச் சிறப்புற்ற இடம் என்றும், அருகி லுள்ள ஒரு திருக்கோயில் இறுதியில் அவர் வாழ்ந்த இடத்துக் கட்டப்பட்டது என்றும் அங்குள்ளோர் கூறுகின்றனர். அத்திருக் கோயிலுள்ளும் ஓர் இடத்தை அவர் உயிர் துறந்த இடம் என்று சுட்டிப் பரவுவதையும் காணலாம். 'வேதியர் வாழும் சேய்ஞல்' விரும்பும் ஆப்பாடி' என்பது அப்பர்வாக்கு (4-48-2)

சைவத் திருமுறைகள் பன்னிரண்டாலும் சிறப்பிக்கப் பெறும் பெருமைபெற்ற சண்டேசுவரரின் வரலாற்றைச் சேக் கிழார் வழிச்சென்று பின்வருமாறு சுருங்கத் தொகுக்கலாம். புனல் நாட்டு மண்ணியாற்றின் தென்கரையில் அமைந்த சேய்ஞலூர், வளங்கள் பல சிறந்தமையோடு, வேதநெறி தழைக்கத் தழையும் மறையவர் பலர் மன்னிவாழும் சிறப்புடையது; சோழர்கள் முடி சூடும் பெருமை பெற்ற ஐந்து பதிகளுள் ஒன்றாகும் பாங்கினது; ஞானசம்பந்தர் இங்கு எழுந்தருளியபோது இது சண்டேசர் அவதரித்த மாட்சியது என்றறிந்து, சிவிகையினின்றும் இழிந்து நடந்து சென்று வழிபட்ட பெருமையுடையது. அந்தணர் மார்பில் காசிப கோத்திரத்தில் தோன்றிய எச்சதத்தன்-பவித்திரை என்பார்க்கு மகவாய் விசார சருமர் தோன்றினார். அவர் இளமை யிலேயே மறைபயின்று கலைநிரம்பிச் சிறிய பெருந்தகையாராக விளங்கினார். பசு மேய்ப்பான் மீது பாய்ந்த புனிற்றாவினை அவன் அடித்துத் துன்புறுத்தியது பொறாது, விசார சருமன் தானே ஆக்கள் மேய்க்கும் பணிமேற் கொண்டான். அவனது அன்புறு பராமரிப்பால் மகிழ்ந்த ஆக்கள் கறவாமே பால்சுரக்கும் பான்மை கண்டு, அதனை இறைவனுக்குத் திருமஞ்சனமாக்க எண்ணி, மண்ணியாற்று மணல் மேட்டில் மணலால் திருக்கோயி லும் இலிங்கமும் அமைத்து இலிங்கத் திருமேனிக்குப் பால் சொரிந்து திருமுழுக்காட்டி வழிபட்டான். தம் பசுக்கள் நல்கும் பால் குறையாமை கண்டும், விசார சருமன் பாலைக்கறந்து மணற் குவட்டின் மீது ஊற்றுவதைக் கேட்டறிந்த மறையவர்கள் சினந்து, அதனை எச்சதத்தன் பால் இயம்பி எச்சரித்தனர். அவனும் உண்மை அறிய விரும்பி ஆநிரை மேய்க்கச் சென்ற மகனைத்

தொடர்ந்து சென்று, மறைந்திருந்து காண்பானாயினான். மணல் இலிங்கத்தின் மீது அபிடேகம் செய்யக் குடங்களில் பாலை நிரப்பி வைத்துப் பூசனை புரியத் தொடங்கினான். அது கண்டு கொதிப்புற்ற தந்தை, அத்திருமஞ்சனக்குடப் பாலைக் காலால் இடறிச் சிதைக்கலுற்றான். அது செய்வது தன் தந்தை என்றறிந்தும் சினந்து அருகே கிடந்த கோலை எடுத்து அவன் தாளைத்தாக்க முற்பட்டான். அக்கோலே திருவருளால் மழுவாக மாறிடத் தந்தையின் இருதாள்களையும் தடிந்துபின், தன் பூசனையைத் தொடர முற்பட்டான். அந்நிலையில், சிவபெருமான் தேவியோடும், பூதகணங்கள் புடைசூழவும் தோன்றித் தந்தையின் தாளைத் தடிந்த பிள்ளையார்க்குத் தாமே தந்தையாகும் உரிமை யளித்து, மகனாகக் கொண்டார். மேலும், அவனைத் தொண்டர்க்கு அதிபனாக்கினார்; தாம் உண்டகலம், உடுத்தன, சூடியன அனைத்தும் அவனுக்காகும் பெருவம நல்கினார். இவற்றிற்கு மேலாகச் 'சண்டீசனுமாம் பதத்தினை நல்கியதோடு, தாம் தம் முடியிற் சூடிய கொன்றை மாலையைத் தம் கைகளால் அவன் முடிமீது சூட்டியும் பெருமைப் படுத்தினார். பிள்ளையாரின் மழுவால் தண்டிக்கப் பெற்றமையால் எச்சதத்தனும் பின்னர்க் குற்றம் நீங்கிச் சிவலோகம் எய்தப் பெற்றான். அறுபது திருவிருத்தங்களால் அமைந்த இப்புராணம்-வரலாறு-பல அரிய உண்மைகளைக் காட்டுவதாகவுள்ளது. திருமுறையாசிரியன்மாரனைவரும் பிள்ளையார் மழுவால் தாளை எறிந்தார் என்றே குறிப்பிட்டுள்ளனர். மாடுமேய்க்கச் சென்றவரிடம், மழுப்படை இருக்கக் காரணமென்ன வென்று சிலர் வினவக்கூடும். ஆக்கள் மேயும் புலத்தில் மழு ஒன்று கிடக்கவும், மேய்ப்போன் அதனைக் கொண்டு செல்லவும் நியாயமின்று. இதனை உளங் கொண்டே தெய்வச் சேக்கிழார், 'தந்தை எனவே அறிந்தவன் தன் தாள்கள் சிந்தும் தகுதியினால், முந்தை மருங்கு கிடந்தகோல் எடுத்தார்க்கு அதுவே முறைமையினால் வந்து மழுவாயிட எறிந்தார்' என்று நேரிய காரணத்தை விளக்கிக் கூறியுள்ளார். கோல் எடுத்துத் தாக்க முற்பட்டவர் தாம் எடுத்தது காலைத் தடியும் மழு ஆயிற்று என்று அறிந்த பின்னரும், தாக்கப்படுவது தன் தந்தை தாள் என்பதறிந்த பின்னரும், சிவ அவராதம் செய்தவர்களை ஒறுக்கும் உறுதியினின்று பிள்ளையார் தளராது உறுதி-யோடிருந்த பான்மையைச் சேக்கிழார் விளக்கம் உணர்த்துகின்றது.

இதே வரலாற்றைச் சிவரகசியம் என்னும் வடமொழி நூல் கூறுவதன் சுருக்கம் வருமாறு. மாலியவான் என்னும் மலையில், சுர்க்க குலத்திலுதித்த கணபத்திரன் எனும் அந்தணன் சுநீதை எனும் தன் மனைவியொடு வாழ்ந்தனன். விதர்ப்ப நாட்டு மன்னன் அநமித்திரன் என்பான், தானியற்றும் அசுவமேத யாகத்திற்குத் தலைவனாக இருந்து நடத்த வேண்டினான், யாக முடிந்த பின்னர்த் தான் பெற்ற பசுநிரையைத் தன் மகன் சண்டரை மேய்த்துவரச் செய்தான். அவை மிக்க அளவில் பால் கொடுக்கக் கண்டு, அதனைச் சுரைக் குடுக்கைகளில் சேகரித்து, அவ்வனத்தேயுள்ள சிவமூர்த்திக்கும் ஆன்மார்த்தமூர்த்திக்கும் அபிடேகம் செய்து வந்தான். இதனால், பாலின் அளவு குறையக் கண்ட தந்தை வினவ, பசுக்களின் முதுமையால் குறைந்ததெனக் கூறினான். ஐயுற்ற தந்தை மரம் ஒன்றிலேறி மறைந்திருந்து மைந்தன் செயலைக் கண்டபோது, மைந்தன் மணலால் இலிங்கம் அமைத்து அபிடேகம் செய்யக் கண்டு சினமீக்கூர்ந்து, பலாதி களைக் காலால் இடறினான். மைந்தன் மிகுந்த சினங்கொண்டு இடறியகாலைத் தருப்பை கொய்ய வைத்திருந்த கோடாரியால் தடிந்தான். உடனே சிவபெருமான் காட்சி தந்து நுமக்கு நம் மணி முடிமாலையும் நிவேதனமும் தந்தோம்; எம்பொற்கோயில் நுமக்கு உரியதாகுக; இன்று முதல் சண்டிகேசன் எனப்பெயர் பெறுவாயாக; எமைப் பணிவோர் நுமைப் பணிந்து எம்தரிசன பலனைப் பெறுவாராக என்றருளிச் சாருபநிலை அளித்தார்.

ஒரே நாயனாரைப் பற்றி இரு மொழிகளில் அமைந்துள்ள வரலாறுகளில்தான் எத்தனை வேறுபாடுகள் உள்ளன! வட மொழிச்சிவரகசியம் சேக்கிழாருக்கு முற்பட்டதாயின் அதனைச் சேக்கிழார் புறக்கணித்திருக்க மாட்டார். சண்டீசர் அந்தணர் என்பதும், தாம் மேய்த்த பசுக்களின் பாலை இலிங்கத்திற்கு அபிடேகம் செய்தார் என்பதும் தாதையின் தாளைத்தடிந்தார் என்பதும், சண்டீசபதம் பெற்றார் என்பதும் தவிரப்பிறவெல் லாம் வேறுபடுகின்றனவே! பெரியபுராண நாயன்மார் நிகழ்ச்சி கள் எல்லாம் தமிழகத்தையும் அதனை அடுத்துள்ள பகுதி களையும் சார்ந்தனவாயிருக்க, விதர்ப்ப நாடும் அசுவமேத யாகமும் இடம் பெறக் காரணமென்ன? சிவரகசிய மூல நூலா சிரியர் சேக்கிழாருக்குப் பிற்பட்டவராயின் இவர் கூறும் சண்டே சுவரர் வரலாற்றை அறியாதிருப்பாரா? அறிந்திருந்தால் இவ் வாறு மாற்றக் காரணமென்? சிவரகசியச் செய்தி, முந்தியு

யுகச் சண்டர்களுள் ஒருவரைப் பற்றியதாகலாம் என்றால், சண்டீசபதம் பெறுவோர் அனைவரும், இலிங்கத்திற்குப் பாலாபிடேகம் செய்யக்கண்டு, பொறாத தந்தையின் தாளைத் தடிந்தவர்களாகவே இருத்தல் வேண்டும் போலும் என்னும் ஐயம் எழாதா? சிவரகசியத்தில் இக்கதை பின்னர் இடைச்செருகலாகச் சேர்க்கப்பட்டிருக்கலாம். அங்ஙனமாயின், அது மிகச் சிறப்பு வாய்ந்த சண்டேசர் வரலாறு தமிழ் மண்ணில் நிகழ்ந்தது என்பதனை உடன்பட மறுக்கும் மாக்களின் செயலாதல் வேண்டும். தமிழகப் பேர், ஊர் நிகழ்ச்சிகள் போல்வனவற்றைப் பொருளறிந்தும் அறியாமலும் வடமொழியில் மாற்றி வழங்கும் வழக்கமும், தமிழ் மூல நூல்களுக்கு வடமொழியில் அடிப்படை காட்டும் முயற்சிகளும் தமிழுக்குப் புதியவையல்ல அனைத்துச் செயல்களும் மதுரையில் நிகழ்ந்தனவாக அமைந்த திருவிளையாடல் புராண நிகழ்ச்சிக்கு, ஆலாசிய மான்மியமெனும் வடமொழி நூலினை மூலமாகக் கூறப்பட்ட செய்தியும் கேட்கப்பட்டது. தமிழ்ச்சைவர்கட்கு சைவ நாயன்மார் நிகழ்வுகட்குச் சேக்கிழரர் வாக்கிற்கு மேற்பட்ட சான்றுகள் வேண்டுவதில்லை என்பது உறுதியாகலின் இத்தகு புறமுயற்சிகளைப் பொருட்படுத்தாது புறக்கணிப்பதே செய்யத்தக்கதாகும். சிவாலயங்களில் இன்று காணப்பெறும் சண்டேசுவரர் வரலாற்றைப் பொறுத்த அளவில் சேக்கிழார் வழங்கியுள்ள செய்திகளே நம்பகத்தன்மையுடையனவாகும்,

நால்வர் வழிபாடு சிறப்புற்ற நிலையில் அவர்களை ஒரு பாடலில் இணைத்தும், தனித்தனியாகவும் பாடும் துதிப்பாடல்கள் மரபு தோன்றியது. ஒவ்வொருவர் மீதும் தனித்தனிச் சிற்றிலக்கியங்களும், நால்வரையும் தொகுத்துப் பாடிய சிற்றிலக்கியங்களும் உருவாயின. அவ்வகையில் புராணம், பிள்ளைத் தமிழ் பாடமுற்பட்டவர்களிடையே பாயிரம் அல்லது கடவுள் வாழ்த்துப் பகுதியில் சண்டீசரைப் போற்றிப் பாடும் மரபு தோன்றியது, தணிகைப் புராண ஆசிரியர் கடவுள் வாழ்த்துப் பகுதியில்,

> புண்ணியம் பாதகமாகப் போற்றிய
> அண்ணலந் தக்கனார் அகத்து நாணிய
> புண்ணியம் பாதக மாகப் போற்றிய
> அண்ணலம் தண்டிதன் அடிகள் போற்றுவாம் என்று

வணங்கியுள்ளார். இவர் சண்டேசுவரரைத் தண்டி என்னும்

பெயரால் குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கது. திருவிளையாடற் புராண ஆசிரியர் பரஞ்சோதி முனிவர், தம் நூலில், 'தந்தை தாளொடும் பிறவித் தாளெறிந்து நிருத்தர் இருதாளைக் சேர்ந்த மைந்தர்' என்று சண்டேசுவரரைக் குறிப்பிடுகின்றார். இக் கருத்தினை உளங்கொண்டும், தம் கற்பனையைச் சேர்த்தும் திருக்குற்றாலத் தல புராண ஆசிரியர்,

தான் பிறந்த தந்தையையும் இனிப்பிறக்கும் நிந்தையையும்
தடிந்து சேயென்
றான் பிறங்கு மழவிடைமேல் ஒருவர் அழைத்திட இருவர்
அயிர்ப்பஏகிக்
கான் பொலிதார் அரிபிரமாதியர்க்கும் எய்தா இருக்கை
எய்திக் கட்வுட்சேடம்
வான் புலவர் பெறாப் பேறு பெற்றவனை நற்றவனை
வழுத்தல் செய்வாம் என்று

வாழ்த்துரைத்துள்ளார். சண்டேசர் தடிந்தது, தந்தையின் தாள் களை மட்டுமன்று, இனித் தான் பிறப்பதற்கான நிந்தையையும் (வினைகள்) ஆகும் என்பதனைப் பிறந்த தந்தையையும் பிறக்கும் நிந்தையையும் எனும் தொடரால் சுட்டினார். சேய்ஞலூர்ச் சேய் சண்டேசுவரர் ஆனபின் சிவபெருமானுக்குப் புதல்வர்கள் மூவர் ஆகின்றனர். மூவரும் ஒருங்கிருந்தபோது மழவிடைமேல் ஒரு வராகிய, சிவபெருமான் (தந்தையார்) 'குழந்தாய் என அழைக் கின்றாராம். கணபதி முருகன் ஆகிய இருவரும் தம்முள் யாரைத் தந்தையார் அழைத்தார் என்று கணப்பொழுது ஐயுற்றிருக்கச் சண்டேசர் விரைந்து எய்தினார் என்னும் கற்பனையைப் 'பிறங்கு மழ விடைமேல் ஒருவர் அழைத்திட இருவர் அயிர்ப்ப ஏகி' என வடித்துள்ள நயம் அறிந்தின்புறத்தக்கது. இப்பகுதியில் சிவகுமாரராகப் போற்றப்பட்டுள்ளார்.

தமிழகத்தில் மண்ணும் மரமும் கொண்டமைந்த கோயில் கள் அழிந்துபடவே காலப்போக்கில் கற்றளிகள் அமைக்கப்பட -லாயின. அந்நிலையில் கருவறைப் புறச்சுவர்கள், மண்டபத் தூண்கள், கோபுர வாயிற் பகுதிகள் போல்வன, அத்திருக்கோயில் அல்லது ஊர் தொடர்பான பொதுச் செய்திகள், திருக்கோயிற் களிக்கப்பட்ட பல் வகைகள் கொடைகள், தெய்வத்திருமேனிகள், அணிகலன்கள் போன்றவற்றின் விவரங்களைப் பொறித்துக் காக்கும் ஆவண ஏடுகளாயின. பின்னர் அவை நாட்டு வரலாற்

-றையும் பண்பாட்டையும் காலங்களால் அழிவுறாது காத்துக் காட்டிவிளங்கும் கருவூலங்களாகத் திகழ்கின்றன. சண்டேசுவரர் பற்றிய செய்திகள் பலவற்றைக் கல்வெட்டுக்கள் உணர்த்து கின்றன. மாமன்னன் இராசராசன் தான், வான்முட்டும் வண்ணம் எழுப்பிய பெரிய கோயிலின் சுவர்கள் பலவற்றையும், ஏடு களாக்கித் தான், தன் உறவினர், உயர் அதிகாரிகள் ஆகியோர் பெருவுடையாருக்கும் அங்கமைக்கப்பட்டுள்ள பிறதெய்வங்கட்கு -மான நிலக்கொடை பொருட்கொடை திருமேனி அளிப்பு அணி கலக்கொடை போல்வனவற்றை விளக்கமாகப் பொறிக்க ஏற் பாடுகள் செய்துள்ளான். அவன் பெரிய கோயிலுக்கு வழங்கிய தெய்வத்திருமேனிகளுள் சண்டேசுவரரும் இடம் பெறக் காண லாம். அவனது தஞ்சைக் கல்வெட்டொன்றில்; பாதாதி கேசம் இருபதிற்று விரலே நாலு தோரை உசரத்து நாலு (ஸ்ரீ ஹஸ்தம்) திருக்கரங்கள் உடையாராகக்கனமாக எழுந்தருளுவித்த சண்டேச்வர பிரசாததேவர் திருமேனி' யும், அவர் எழுந்தருளு தற்காக அளிக்கப்பட்ட பத்மபீடமும், பாதாதி கேசாந்தம் ஐவிரலே ஐஞ்சு தோரை உசரத்து இரண்டு கையுடையராக் கனமாகச் செய்த சண்டேச்வரர் ஒருவரும், கால் தடியப் பெற்றுக் கிடக்கும் வண்ணம் கனமாகச் செய்யப்பட்ட தந்தை திருமேனி ஒன்றும் சிவப்பிரசாதம் பெறும் நிலையில் சண்டேச மூர்த்தம் ஒன்றும் அளிக்கப்பட்டமை பொறிக்கப்பட்டுள்ளதனை அறிஞர் கள் குறிப்பிட்டுள்ளனர்.

சிவபெருமான் உடைமைகளைக் காப்பவராகவும் சண்டேசு வரர் விளங்குவதால் பெருமானுக்களிக்கப்படும் கொடைகள் வரவு-செலவுகள் சண்டேசுவரர் பெயரால் ஆவணம் செய்யப் படும். சிவாலயங்களில் கோவில் காரியம் பார்ப்பவர்களும், பாதுகாவலராக அமைபவர்களும் இறை பக்தியும் பொல் லாங்கு நேராதவாறு காக்கும் அச்சத்தோடுகூடிய பொறுப் புணர்வும் உடையவர்களாய்ச் செயற்பட வேண்டும் என்ப தனை ஒரு பாடலில் அமைத்துக் காட்டியுள்ளார்கள். காப் போர்க்கிடப்பட்ட கட்டளை போல அமைந்த சிறப்பால் சில கோயில்களில் அதனைக் கல்வெட்டில் அமைத்துக்காட்டியுமுள் ளனர். அப்பாடல் பின்வருமாறு :-

சண்டீச் சுரண் ஓலை சாகரஞ்சூழ் வையகத்தீர்
கண்டீச் சுரன் கருமம் ஆராய்க-பண்டே
அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தான் பாதம்
திறம்பாமைச் சென்னிமேல் வைத்து இப் பாடல்

எழுத்துப் பிழை களைந்து வரையப்பட்ட திருந்திய வடிவமாகும். மதுராந்தகம், தஞ்சை, திருவாமாத்தூர், திருமெய்யம் போன்ற ஒன்றுக்கொன்று இடையே தொலைவு மிக்க பகுதிகளிலுள்ள கல்வெட்டுக்களில் இப்பாடல் காணப்படுவதால் இப் பாடற் செய்தியின் சிறப்பினைப் பல பகுதி மக்களும் உணர்ந்துள்ள தன்மையை உணரலாம். 'கடல் சூழ்ந்த உலகில் வாழும் மக்களே பண்டு (இக்கோயிலுக்கு) அறஞ்செய்தவன், அறஞ் செய்யக் காரணமானவன், செய்யப்பட்ட அறங்கள் சிதைவுறாவண்ணம் பாதுகாத்தவன் ஆகியோர் திருவடிகளை நுங்கள் தலை மிசைக் கொண்டு, ஈசுவரனது (திருக்கோயிற்) காரியங்களைப் பிழைபடாது ஆராய்ந்து, செய்து வருவீராக. இது சண்டேசரின் ஓலை (கட்டளை) ஆகும்.' என்பது இதன் கருத்தாகும். சண்டேசன் ஓலை என்றமையால் இந்தப் பாதுகாப்பாணை சிவாலயப் பாதுகாப்பாளர்க்கு நேராகவும், பிறர்க்குச்சார்பு நிலையிலுமாக அமையும்.

சிவாலயங்களின் உடைமைகள் அனைத்திற்கும் சண்டேசுவரரே பொறுப்புடையவராவார் எனப்படுவதால், அவற்றின் வரவும் செலவும் இவர் கை வழியாகவே நடைபெறல் வேண்டும் என்னும் மரபு நிகழ்ந்து வந்ததனைக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. சிவாலயங்கட்குரிய நிலங்களை விற்பதாயினும், புதிய நிலங்களைக் கொடையாகப் பெறுவதாயினும், வாங்குவதாயினும், அவற்றிற்கான ஆவணங்கள் சண்டேசர் கை வழியாக அமைக்கப்படும். அங்ஙனமே ஆலயப் பண்டாரத்திலிருந்து பொற்காசுகளைக் கடன் கொடுப்பதாயினும், கொடையாகப் பெறுவதாயினும் அவையும் நிகழ்த்தப் பெறும்- இத்தகு நிகழ்வுகள் சிவாலய நிருவாகத்தினரோ, ஊர்ச்சபையாரோ சொல்வதன் பேரில் நடைபெறும். கல்வெட்டுக்களில் இன்னாரால் கூறப்பெற்று இன்ன நிகழ்ச்சி நடத்தப்பெற்றது என்னும் செய்தி குறிப்பிடப்படும். பின்வரும் கல்வெட்டுத் தொடர்கள் இவ்வுண்மையைப் புலப்படுத்தும். தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் இடம் பெறும் வாசகங்களிற் சில வருமாறு :

''மூலப் பிருத்தரான ஸ்ரீ சண்டேஸ்வரதேவர், ஸ்ரீஹஸ்தத்தால் இப்பொன் முழுக்கழஞ்சும் கைக்கொண்டு தேவதானம் திருநாமத்துக் காணியாக விற்றுக் குடுத்த நிலம்'' -

(தொகுதி 3-1 கல். 62)

"உறையூர்க் கூற்றத்துத் திருப்பராய்த்துறை சண்டேஸ்வரப்பெருமாளுக்கு விற்றுக்கொடுத்த நிலம்
(தொகுதி 9-கல்.564)

"ராஜீஸ்வரமுடையார் சண்டேஸ்வர தேவர்க்கு விற்றுக் குடுத்த நில விலையாவணம்" (தொகுதி 3-1 கல் 54)

"சண்டேஸ்வரர் பக்கல் தாங்கள் கொண்ட காசு [20] உய
(தொகுதி 5 கல்.993)

"திருவெண்காருடைய நாயனார் ஆதி சண்டேசுவர தேவர்க்கு தாரா பூர்வமாக சிலாலேகை பண்ணிக்கொடுத்தபடி வடபிடாகைப்பற்று கருங்குழி" (தொகுதி- 5 கல்.998)

மண்ணியாற்றங் கரையில் சேய்ஞலூர்ப் பிள்ளையார்க்குச் சிவபெருமான் தேவியோடு காட்சி நல்கிச் சண்டீசுவர பதமும் பிறசிறப்புக்களும் வழங்கிய திருக்கோலத்தைச் 'சண்டேசானுக்கிரகமூர்த்தி' என்று சைவ உலகு போற்றிக் கொண்டாடும். பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவபெருமான். அடியார்களுக்கு அருள்புரியவும் கொடியோர்களை அழிக்கவும் கொண்ட கோலங்கள் இருபத்தைந்தாகும் எனச் சைவாகமங்கள் கூறுகின்றன. அந்த மூர்த்தங்கள் சிவபெருமானுடைய ஐந்து திருமுகங்களிலிருந்து தோன்றியன என்றுரைக்கும் ஆகமங்கள், இறைவனுடைய வாமதேவ முகத்திலிருந்து கங்காளர், சக்கரதானர். விக்னேசுவரானுக்கிரகர். சண்டேசானுக்கிரகர். ஏகபாதர் என்னும் ஐந்து மூர்த்தங்கள் தோன்றின. அம்சுமத்பேதாகமம் உத்தரகாமிகாகமம் போன்றவற்றில் இம்மூர்த்தியின் வடிவம் விளக்கப்பட்டுள்ளது. வேறு சில ஆகமங்களிலும் இவ்வடிவம் சிறிய வேறுபாட்டுடன் காட்டப்பட்டுள்ளதனை அறிஞர்கள் காட்டியுள்ளனர். இதில் பரமேசுவரன் பார்வதிதேவியுடன் அமர்ந்திருப்பார். பெருமான் மேல் வலக்கரத்தில் படையும் இடக்கரத்தில் மானும் கொண்டிருப்பார். ஏனைய இருகரங்களும் சண்டேசுவரரின் திருமுடியில் மாலை சூட்டும் நிலையில் இருக்கும் பெருமானுக்கு அருகில் தேவி இடதுகாலைக் கீழே தாழவிடுத்த நிலையிலும் வலது காலை மடித்து ஊன்றிய நிலையிலும் கொண்டிருப்பார். பெருமான் திருமுகம் சண்டேசுவரை நோக்கிய நிலையில் சற்றே இடதுபக்கம் திரும்பிய பாங்கில் அமைந்திருக்கும். இச்சிவமூர்த்தத்தை அமைக்கும்முறை, வழி

படும்முறை போன்றவற்றை ஆகமங்களும் பல்வேறு சிற்பசாத் திரங்களும் விளக்கமாகக் கூறுகின்றன. இம்மூர்த்த அமைப்பில் சண்டேசுவரர் அமர்ந்த நிலையிலும், நின்ற நிலையிலும் காட் டப்படுவதுண்டு.

சிவாலயங்களில் சிவனது அருவுருவத் திருமேனியாகிய இலிங்க வடிவமே நிறுவிப் போற்றப்பட்டு வருவதால், சிவனது மூர்த்தி பேத வடிவங்களைத் தனியே கோயில்களில் கருவறை மூர்த்தமாக நிறுவிப்பரவும் மரபில்லை. கருவறையின் புறப்பகுதி யிலுள்ள கோட்டங்களில் கோட்ட மூர்த்திகளாக வைக்கப் பெற்று வணங்கப் பெறுவர். விமானங்களிலும் அர்த்த-மகா மண்டபங்களின் தூண்கள் போன்றவற்றிலும் கோபுரங்களிலும் இத்திருவுருவங்கள் கல்லிலும், சுதையிலும் வடித்துப் போற்றப் பெறும்.

தமிழகச்சிவாலயங்கள் பலவற்றிலும் சண்டேசானுக்கிரக மூர்த்தி வடிவம் இருந்த போதிலும், கங்கை கொண்ட சோழ புரத்தில் இராசேந்திரசோழன் உருவாக்கிய 'கங்கை கொண்ட சோழீச்சரம்' எனும் திருக்கோயிலின் வெளிச்சுற்று மாடமொன் றில் கோட்ட மூர்த்தியாக அமைக்கப்பட்டிருக்கும் சிலாமூர்த்தி வடிவம் கலைத்திறனும் கவினும் மிக்குத் திகழ்கின்றது. பிற்காலச்சோழர் கலைமாட்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங் கும் அத்திருவுருவம், படிமக்கலை வல்லுநர்கள் பார்த்துப் பார்த்து வியக்கும் சிறப்பினதாகவுள்ளது. கூப்பிய கரங்களோ டும் தேக்கிய அன்பு, அச்சம், அமைதி திகழும் முகத்தோடும் சற்றே தலைசாய்த்துப், பெருமான் சூட்டும் திருமாலையை ஏற்கும் காட்சி வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்து விளங்குவதாகும். அவ்வாறே பெருமான் பெருமாட்டி ஆகியோர் தோற்றமும் அணிகலன் திகழும் ஒப்பனையும் காண்போரைக் கவர்ந்து மயக்கும் பாங்கினவாய் விளங்குகின்றன.

சிறப்புமிக்க இம்மூர்த்தங்களுள் அடுத்துக் குறிப்பிடத்தக்க சிறப்புடையது, மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசர் திருக் கோயில் கம்பத்தடி மண்டபத்தில் விளங்கும் சண்டேசானுக் கிரகமூர்த்தமாகும். நேரே நோக்கும் திருமுகத்தொடு விளங்கும் பெருமானின் திருமுன்பு, நின்ற நிலையிலிருந்து சண்டேசுவர் அருள் பெறும் காட்சி அமைக்கப்பட்டுள்ளது. இங்கு நாயக்கர்

காலக்கலைத் திறனுக்குக் கட்டியம் கூறும் வகையில் இந்த மூர்த்தமும் இதே போல ஏனைய சிவமூர்த்தங்களும் தூண்களில் வடிக்கப்பட்டுள்ளன, பொதுவாகப் பெருமான் பெருமாட்டியுடனிருந்து சண்டேசருக்கு இண்டை சூட்டும் காட்சியே அமைக்கப்படும். எனினும், இதற்கு மாறாகத் தஞ்சை மாவட்ட ஏனாதிமங்கலத் திருக்கோயிலில் கோட்டம் ஒன்றில் அமர்ந்த நிலையிலுள்ள சண்டேசுவரருக்குப் பெருமான் மட்டுமே தனித்திருந்து மாலை சூட்டும் காட்சி வடிக்கப்பட்டிள்ளது.

சண்டேசானுக்கிரகமூர்த்தம் இடம் பெறாத சிவாலயங்களைக் காணக்கூடுமாயினும் அம்மூர்த்தியால் அருளப் பெற்ற சண்டேசுவரர் இடம் பெறாத சிவாலயங்களைக் காணுதல் இயலாது. சிவமூர்த்தங்கள் இருபத்தைந்தினுள்ளும், தமிழகத்தில் வாழ்ந்த ஓர் அடியார் பொருட்டுச் சிவபெருமான் தனியே திருமேனி கொண்டருளிய சிறப்புடையது 'சண்டேசானுக்கிரக மூர்த்தி' வடிவமாகும், ஓராற்றான், மார்க்கண்டேயருக்காகக் காலனைக்காயும் பொருட்டுக்கொண்ட மூர்த்தத்தினைக் கூறலாமாயினும், மார்க்கண்டேயர் வரலாறு சேய்ஞலூர்ப் பிள்ளையாருடையதைப் போன்றில்லாமல், சற்றே பௌராணிகச் சார்புடையதாக அமைந்திருப்பது சிந்திக்க வைக்கின்றது.

'சிவபூசையின் மிக்க புண்ணியமும், சிவாபராதத்தின் மிக்க பாவமும்' இல்லை; 'தஞ்செயலற்றுச் சிவாதீனமாய் நிற்போர் செய்தது பாதகமாயினும் அதனைச்சிவன் தமது பணியாகவே பண்ணிவிடுவர்' என்னும் சித்தாந்தக்கோட்பாடுகட்குச் சண்டேசுவரர் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றார். அதனால் அருணந்திசிவாச்சாரியார்தம் சித்தியார்ச் சுபக்கத்தில், சண்டேசுவரர் வாழ்வினை எண்ணி,

அரனடிக் கன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்
பரனடிக் கன்பிலாதார் புண்ணியம் பாவமாகும்' என்று

முற்பகுதியில் சித்தாந்த விதி கூறிப் பிற்பகுதியில், அதற்கு எதிர் நிரல் நிறை முறையில்,

வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி
நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே'

என்று எடுத்துக் காட்டுத் தந்து விருத்தத்தை [119] நிறைவு செய்துள்ளார்.

''சண்டேசுரர் சிவபூசையின் இறுதியிலே பூசிக்கப்பட்டுச் சிவனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அன்னம் பானீயம் முதலியனவும், தாம்பூலம், மாலை, சந்தனமும் ஆகிய நிருமாலியங்களை ஏற்று, சிவபூசா பலத்தைக் கொடுக்கும் அதிகாரம் உடையவர். இச்சண்டேசுர பூசை செய்யாவழிச் சிவபூசையாற் பயன் இல்லை. அது,'' சண்டனை அர்ச்சித்தவரே சம்புவை அர்ச் சித்தபலம்—கொண்டிடுவர் மற்றையர் கொள்ளார்'' என்னும் சைவ சமய நெறித் திருக்குறளான் உணர்க' என்று ஆறுமுக நாவலரவர்கள் கூறும் சைவசமய அறிவுரையைச் சைவப்பெருமக்கள் போற்றிப் பயன்பெறுதல் வேண்டும். சிவபூசை செய்வோர்க்கேயன்றி சிவாலய வழிபாட்டிற்குச் செல்லும் ஏனையோர்க்கும் இவ்வறிவுரை பொருந்துவதாகும்.

# சோழர் கல்வெட்டுப் பொறித்த துர்க்கை ஊர்தி

—வெ. வேதாசலம்

சோழர் கல்வெட்டுப்பொறித்த துர்க்கையின் வாகனமான சிங்கத்தின் சிற்பம் ஒன்று தொப்பலாக்கரை என்ற ஊரில் கள ஆய்வில் கண்டறியப் பெற்றது. இராமநாதபுர மாவட்டம் திருச்சுழியில் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பரளச்சி என்ற ஊருக்கு அண்மையில் இவ்வூர் உள்ளது. இவ்வூரின் பெருமாள்கோவில முன்பாக இச்சிற்பம் எடுத்துவைக்கப்பட்டுள்ளது. இப்பெருமான் கோவிலில் காணப்பெறும் இதுவரை படியெடுக்கப்பெறாத புதிய பிற்காலப்பாண்டியர் கல்வெட்டுக்களில் அளற்று நாட்டைச் சேர்ந்த குளத்தூர் என்று இவ்வூர் குறிப்பிடப்படுகின்றது. இதுவே இவ்வூரின் பழையபெயராக இருக்கவேண்டும். தற்போது இவ்வூருக்கு குளத்தூர் என்ற பெயர் மறைந்து தொப்பலாக்கரை என்று வழங்கப்பெற்று வரப்பெறுகின்றது. சிங்கச் சிற்பத்தில் காணப்பெறும் கல்வெட்டிலும் இவ்வூர் "எழில்துங்கமதிள்சூழ் குளத்தூர்" என்று சிறப்பித்துக் கூறப்படுகின்றது.

கல்லிலே வடிக்கப்பெற்றுள்ள இச்சிங்கத்தின் சிற்பம் பின்னங்கால்களை மடித்து முன்னங்கால்களை நீட்டிக்கொண்டு அமர்ந்த நிலையிலுள்ளது. நன்கு உருண்டு திரண்ட பொலிவான தோற்றத்துடன் வாயைப்பிளந்த நிலையில் வாலை முறுக்கி முதுகின் மீது வைத்துக் கொண்டுள்ளது. இதன் பிடரிமயிர் தலையின்பின்புறம் சுருள்சுருளாகத் தொங்குகின்றது. முன்புறம் நீட்டிய இருபாதங்களுக்கிடையேயும் அமர்ந்திருக்கும் பீடத்தின் வலப்புறமும் இதனைச் செய்வித்தோரின் பெயரும் அது எதற்காகச் செய்யப்பட்டது என்பதும் தமிழில் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்ரீஎங்க
2. ள் பிரான் ே

3. சாழற்கி யா(ன்)
4. டிரு(ப) தெட்டில் எழில்
5. துங்கமதிள்சூழ் குள
6. த்தூர் துக்கைக்கி சிங்கம
7. து செய்வித்தான் வீரன்சடைக்க
8. (ன்) தான் செந்தமிழ்சேர் தமவித்தகந் வெண்புள் வேந்து.

இக்கல்வெட்டு இச்சிங்கத்தின் சிற்பத்தைக் குளத்தூரில் இருந்த துர்க்கையம்மனுக்கு ஊர்தியாக வீரன்சடைக்கண் என்பவன் சோழபிரானின் இருபத்தெட்டாவது ஆட்சியாண்டில் செய்துவைத்ததைத் தெரிவிக்கின்றது. இசசெய்தி பின்வரும் முறையில் அமைந்த வெண்பாவாக விளங்குகிறது.

ஸ்ரீ எங்கள்பிரான் சோழற்கி யாண்டிருபத் தெட்டில்எழில்
துங்கமதிள் சூழ்குளத்தூர் துக்கைக்கி - சிங்கமது
செய்வித்தான் வீரன்சடைக் கன்தான் செந்தமிழ்சேர்
தமவித்தகந் வேண்புள் வேந்து.

இக்கல்வெட்டின் மூலம் எந்தச் சோழமன்னனின் இருபத்தெட்டாவது ஆட்சியாண்டில் இச்சிற்பம் செய்யப்பட்டது என்பதை அறிய முடியவில்லை. ஆனால் இதன் எழுத்தமைதியைக் கொண்டு இக்கல்வெட்டு கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்டதாகக் கூறலாம். எனவே இக்கல்வெட்டில் குறிக்கப் பெறும் சோழமன்னன் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் இப்பகுதியில் ஆட்சி புரிந்த முதல் இராசராசனாகவோ அவனையடுத்து முதல் இராசேந்திரன்காலத்தில் அவனது பிரதிநிதிகளாகச்சோழ பாண்டியர் என்ற பெயரில் பாண்டியநாட்டில் ஆட்சி புரிந்த சோழமன்னர்களில் ஒருவராகவோ, முதற்குலோத்துங்க சோழனாகவோ இருக்க வேண்டும். இவர்களில் இக்கல்வெட்டு முதல் இராசராசசோழனுக்குரியது இல்லை என்பதை இதன் எழுத்தமைதியைக்கொண்டும் வட்டெழுத்தில் இது எழுதப் படாது தமிழில் எழுதப்பெற்றிருப்பது கொண்டும் கூறலாம். அடுத்து, சோழபாண்டியர் என்று பெயர் புனைந்து ஆட்சி புரிந்த மன்னர்களில் இருபத்தெட்டு ஆண்டுகள் ஆட்சிபுரிந்தவர் யாரும் இல்லை. எனவே சோழபாண்டியர்களில் ஒருவருக்குரிய கல்வெட்டாகவும் இதனைக்கொள்ள இயலாது.

ஆதலின் கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் கி.பி.12-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஆட்சிபுரிந்த முதல்குலோத்துங்கசோழனே இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சிபுரிந்தமையால் இக்கல்வெட்டில் குறிக்கப்பெறும் சோழவரசன் முதற்குலோத்துங்கனாகவே இருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வரவேண்டியிருக்கின்றது. இவனே சோணாட்டில் ஆதிராசேந்திரன் ஆட்சிக்குப்பிறகு பதவியேற்று பாண்டிய நாட்டில் ஏற்பட்ட பஞ்சபாண்டியர் கலகத்தை அடக்கி பாண்டிய நாட்டைத் தனது நிருவாகத்திற்குள் கொண்டு வந்தவன் ஆவான். இதனை உறுதிப்படுத்தும் வண்ணம் இவனது கல்வெட்டுகள் பாண்டியநாட்டில் பல இடங்களில் கிடைக்கின்றன:

இக் கல்வெட்டினையும் இச்சிங்கத்தினையும் முதற்குலோத்துங்கன் காலத்தினைச் சார்ந்தவையெனக் கொண்டால் இச்சிற்பம் அவனது இருபத்தெட்டாம் ஆட்சியாண்டில் கி.பி. 1098 இல் செய்யப்பட்டிருக்கவேண்டும் என்ற முடிவு செய்யலாம். இச்சிற்பம் இன்று தொப்பலாக்கரை என்று அழைக்கப்படும் குளத்தூரிலிருந்த துர்க்கைக்கு வாகனமாகச் செய்து வைக்கப் பட்டிருக்கின்றது. இத்துர்க்கைக் கோயில் இன்று இவ்வூர் காளியம்மன் கோயிலாக விளங்குகின்றது. அண்மைக்காலத்தில் இது புதுப்பிக்கப்பெற்ற புதுப்பொலிவுடன் காணப்படுகின்றது. இக் கோயிலைப் புதுப்பித்தபோது இதிலிருந்த துர்க்கை வாகனம் சிறிதுபீடத்தில் உடைந்த நிலையில் இருந்தமையால் அங்கிருந்து அகற்றப்பெற்று தற்போது இவ்வூர் பெருமாள்கோயிலுக்கு வெளிப்புறமுள்ள பலிபீடத்திற்கு அருகில் ஊரார் எடுத்து வைத்திருக்க வேண்டும். கருமையான கருங்கல்லில் செய்யப்பெற்ற இச்சிங்கத்தின் உருவம் சிறியதாக இருந்தாலும் உண்மைத் தோற்றத்துடன் சிங்கம் ஒன்று கம்பீரமாக அமர்ந்திருப்பது போன்ற கலைச் சிறப்புடன் விளங்குகின்றது. கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சோழர்கள் பாண்டிநாட்டில் படைத்த சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

இதனைச் செய்வித்த வீரன் சடைக்கனின் மற்றொரு பெயர் தர்மவித்தகன் வெண்புள்வேந்து என்பதாகும். தர்மவித்தகன் என்றபெயர் கல்வெட்டின் தமவித்தகன் என்பது குறிப்பிடப் படுகின்றது. இவன் செந்தமிழில் வல்லவனாகவும் பற்றுடையவனாகவும் விளங்கியமையால் ''செந்தமிழ்சேர் தமவித்தகன்"

என்று வெண்பாவில் புகழ்ந்து கூறப்படுகின்றான். எனவே தான் இவன் தனது செயலை வெண்பா வடிவிலமைந்த கல்வெட்டாக தான் செய்வித்த துர்க்கையின் சிங்கவாகனத்தில் பொறிக்கச் செய்திருக்கின்றான். வெண்புள்வேந்து என்ற பெயருக்குப் பறவைக்கு அரசன் அல்லது வெண்புள் என்ற ஊரின் தலைவன் என்று பொருள் கொள்ளலாம்.

வீரன்சடைக்கன் செய்வித்த துர்க்கையின் சிங்கவாகனம் கி.பி. 11–ஆம் நூற்றாண்டில் இப்பகுதியில் சிறப்புற்றுவிளங்கிய துர்க்கை வழிபாட்டை எடுத்துக்காட்டுவதாய் விளங்குகின்றது. துர்க்கையின் வழிபாடு பாண்டிய நாட்டில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே சிறப்புற்று விளங்கியிருப்பதைக் கல்வெட்டுகளும் சிற்பங்களும் எடுத்துக்காட்டுகின்றன. திருப்பரங்குன்றத்தில் பராந்தக நெடுஞ்சடையன் என்ற பாண்டிய மன்னனின் அதிகாரியாக விளங்கிய சாத்தன் கணபதியின் மனைவி 'நக்கன் கொற்றி என்பவள் கி.பி. 773-இல் துர்க்கைக்கென்று கோயில் ஒன்று எடுப்பித்துள்ளாள்.[1] சோழர்காலத்தில் மதுரை மாவட்டம் சின்னமனூரில் துர்க்கா பரமேஸ்வரி கோயில் ஒன்று சிறப்புடன் விளங்கியிருக்கின்றது.[2] தமிழ்நாட்டில் துர்க்கை பல்லவர் காலத்திற்கு முன்பு கொற்றவை என்ற பெயரில் சிறப்புடன் வழிபடப் பெற்றிருக்கின்றாள். பல்லவர், பாண்டியர் காலத்துக் குடைவரைக் கோயில்களும், கட்டடக்கோயில்களிலும் இவளது சிற்பங்கள் காணப்படுகின்றன. இவற்றிற்கருகில் இவளது ஊர்தியாக சிங்கமும் மானும் சேர்ந்தாற்போன்றும் தனித்த நிலையிலும் மாறி மாறி வடிக்கப்பெற்றுள்ளன. ஆனால் இந்நிலை கி.பி. 11–ஆம் நூற்றாண்டில் பாண்டியநாட்டில் இப்பகுதியில் மாறி துர்க்கையின் வாகனமாக சிங்கமே வடிக்கப்பட்டு வந்ததைத் தொப்பலாக் கரையில் கண்டறியப்பெற்ற இச்சிங்கத்தின் சிற்பமும், அதில் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டும் உணர்த்துகின்றன.

# ஏனை மருட்பா

—முனைவர் சா. கிருட்டிணமூர்த்தி

தொல்காப்பியத்துள் இலக்கணம் கூறப்பட்டுள்ள தலைமைப் பா வகைகள் நான்கு. அவை ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி என்பனவாகும் (தொல், பொருள் 410). இந்நான்கனுக்கும் பெயர் சூட்டப்பட்டு அவற்றிற்குரிய இலக்கணங்கள் தெளிவுறக் கூறப்பட்டுள்ளன. இப் பா வகைகளோடு ஒருங்கு வைத்து எண்ணத்தக்க அளவிலோ பிற அளவிலோ மருட்பா என்னும் பாவகை பற்றித் தொல்காப்பியத்துள் விசுந்தோதி இலக்கணம் கூறப்படவில்லை. இதனாலேயே பின்வந்த யாப்பருங்கலமும் இப்பாவகைக்கென (மருட்பாவிற்கென) இலக்கண வரையறை எதனையும் செய்யவில்லை.

ஆனால் தொல்காப்பியத்துள் பாக்களுக்குரிய ஓசையைச் சுட்டுமிடத்தில் மருட்பா பற்றிய குறிப்பு அதற்குரிய ஓசையைக் குறிக்கும் நிலையில் சுட்டப்படுகின்றது.

> ''அகவல் என்பது ஆசிரி யம்மே
> அதாஅன் றென்ப வெண்பா யாப்பே"
>
> (தொல்.செய். 78)
>
> ''துள்ள லோசை கலியென மொழிப'' (தொல்.செய். 79)
>
> ''தூங்க லோசை வஞ்சி ஆகும்'' (தொல்.செய். 80)

எனக் கூறியபின்,

> ''மருட்பா ஏனை இருசார் அல்லது
> தானிது என்னும் தனிநிலை இன்றே'' (தொல்.செய்,81)

என மருட்பாவிற்கு ஓசை கூறியுள்ளார் தொல்காப்பியர், ஆசிரியப்பாவிற்கு, அகவல் ஓசையும், வெண்பாவிற்கு வெள்ளோசையும், கலிப்பாவிற்குத் துள்ளலோசையும், வஞ்சிப்பாவிற்குத் தூங்கலோசையும் கூறிய தொல்காப்பியர், மருட்பாவிற்கென்று தனியோசை இல்லை என்பதையும், இரண்டு பாவோசை

சேர்ந்தல்லது இதுதான் மருட்பாவின் ஓசையென்று சொல்லு மளவிற்குத் தனித்து இயக்கும் தன்மை அதற்கில்லை என்பதையும் இந்நூற்பாவில் தெளிவுபடக் கூறியுள்ளார் தொல்காப்பியர்.

**இருசார் என்பது யாது?**

இந்நூற்பாவிற்கு உரைகண்ட உரையாசிரியர்கள் அனைவரும் 'இருசார்' என்பது வெண்பாவையும் ஆசிரியப்பாவையும் குறித்தது எனக்கொண்டு இவ்விரண்டின் ஓசையே மருட்பாவிற்கு ஓசையாகும் என்றும் கொண்டனர். இக்கருத்திற்குத் தோற்றுவாய் செய்தவர் இளம்பூரணரேயாவார். அவர், "மருட்பாவிற்குரிய ஓசை இதுவென்னும் தன்மையில்லை; அதற்கு வெண்பாவும் ஆசிரியப்பாவும் உறுப்பாக, இவ்விரண்டின் ஓசையே அதற்கு ஓசை எவ்வாறு" (இளம்.தொல்,பொருள் 390) என முன்மொழிந்த இக்கருத்தையே ஏனைய உரையாசிரியர்களும் வழிமொழியலாயினர்.

மேற்கண்ட நூற்பாவிற்கு உரைகண்டதில் குழப்பம் நேர்ந்துள்ளதை உற்று நோக்கினால் புலனாகும். முறைவைப்பில் நால்வகைப் பாக்களுக்கும் ஓசை கூறிய நிலையில், மருட்பாவைத் தொல்காப்பியர் அதுவரை விதந்து கூறாத நிலையில்,

"மருட்பா ஏனை இருசார் அல்லது
தாணிது என்னும் தனிநிலை இன்றே"

என்ற நூற்பாவில் உள்ள 'ஏனை' என்ற சொல்லை மருட்பாவிற்குக் கூட்டி, 'ஏனை மருட்பா இருசார் அல்லது' எனப் பொருள் காண்பது தான் பொருத்தமுடையதாக இருக்கும். இதனால் 'ஏனை' என்பதை 'மருட்பா' என்பதனோடு ஏற்றிக் கூறுவதால் நால்வகைப் பாஒழிந்த 'ஏனை மருட்பா' என ஒழிபுநிலையில் பொருள் கொள்ளலாம். அவ்வாறல்லாமல் பொருள் கொண்டால் தலைமைப் பாக்களோடு ஒருநிகர் தன்மையதாக மருட்பாவைக் கொள்ள நேரிடும்.

'ஏனை' என்பதை 'இருசார்' என்பதோடு கொண்ட உரையாசிரியர்கள் 'ஏனை இருசாரல்லது' என்பதற்குக் 'கலியும் வஞ்சியும் நீங்கிய ஏனையவாகிய வெண்பாவும் ஆசிரியரும்' எனப் பொருள்கொள்ளத் தலைப்பட்டனர். அவ்வாறு பொருள்

கொள்ள நேர்ந்ததால், பாக்களுள் முதன்மையானது என்று கருதப் பட்ட வெண்பா முன்னாக வந்து அதன் பின்னாக ஆசிரியம் வரும் என்பது பாமரபு கருதி அவ்வுரையாசிரியர்களால் கூறப் பட்டுள்ளது. "மருட்பா என்பது மயங்கிய பா என்று பொருள் வருதலின் வெண்பா ஒழிந்த எஞ்சிய பாக்கள் தம்முள் மயங்குவன மருட்பா என்ற கருத்தினரும் இருந்தனர். பரிபாடலில் அங்ஙனம் மயங்கிவரும் பகுதிகள் பல காணப்படுதல் இவண் குறிப்பிடத் தக்கதாகும்" (சோ.ந. கந்தசாமி, தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும்) என்ற கருத்தும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

## மருட்பா யாப்புமரபு

தலைமைப் பாக்களோடு ஒருங்கு வைத்து எண்ணமுடியாத மருட்பா என்னும் யப்பாபு வகை, தொல்காப்பியத்துள் விளக்கப் படாமல் பின்வந்த இலக்கண நூல்களால் மட்டுமே விளக்கப் படுத்தப் படுகின்றது. பண்டை இலக்கியங்களில் பரவலான வகையில் மருட்பா இருந்ததாகத் தெரியவில்லை. இப் பாவகை ஓசை என்ற அளவில் தொல்காப்பியத்துள் காட்டப்பட்டுள்ள தன்மையை நாம் காணமுடியும். வெண்பா அடிகளால் வந்து ஆசிரிய அடிகளால் முடியக்கூடிய நிலையில் நால்வகைப் பாக் களுக்குரிய ஓசையல்லாமல் ஒருவகையான புதிய ஓசை தோன்றக் கூடும் என்று கூறியதாக அதற்குப் பொருள் கொள்ளவும் இயலும்.

எனவே, ஓசையளவில் இலக்கணம் கூறப்பட்ட அப்பாவகை பின்வந்த இலக்கணநூல்களால் தனிப்பாவகையாகக் கூறப் பட்ட தன்மை, அப் பாவகையின் ஆக்கநிலையைக் குறித்தே அமைந்துள்ளதாகக் கருதலாம். யாப்பிலக்கண வளர்ச்சியில் மருட்பா என்னும் யாப்பு வகையைப் 'புதிய வடிவாகக் கருதிய ஒரு யாப்பு முயற்சியாகவே பின்வந்த இலக்கண நூலார் கருதி யிருக்கக் கூடும். அவ்வாறு கொள்ளப்பட்டாலும் அதற்குரிய யாப்பு வளர்நிலையோ இலக்கிய வளர்ச்சியோ பிற்காலத்தும் எழுந்ததாகத் தெரியவில்லை.

## மருட்பாப் பொருண்மை

இத்தகைய மருட்பா பாடுதற்குரிய பொருண்மை பற்றி இலக்கண நூல்கள் கூறுகின்றன. மருட்பா கைக்கிளைப் பொருண்மையில் பாடப்பெறும். கைக்கிளை என்பது அன்பின்

ஐந்திணை போலல்லாமல் சிறப்பில்லாத திணையென்றும், அருகிய வழக்கிற்குரியது என்றும் உரையாசிரியர்கள் கருதுவர். கைக்கிளை என்பதே ஒரு தலை அன்புடையது. அகப்பொருளில் அன்றிப் புறப்பொருளில் வரும் கைக்கிளையும் ஒருதலைச் சார்புடையதாகவே அமையும். ஒருவரை வாழ்த்துதல், அறிவுறுத்துதல் போன்ற பொருளில் புறப்பொருளில் பாடப்பெறும் பொழுது அவையும் கைக்கிளைத் தன்மையுடையதாகவே அமைகின்றன. கைக்கிளை, புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, அவையடக்கியல், செவியறிவுறூஉ போன்ற பொருளில் மருட்பா பாடப் பெறுதலைப் பல இலக்கண நூல்கள் கூறுவதைக் காணலாம். இப் பொருண்மைகள் அனைத்திலும் பாடுவோனின் உள்ள உணர்வைப் பாடப்படுவோன் புரிந்துகொள்வதாகவோ அல்லது பாடப்படுவோனின் உள்ள உணர்வை பாடுவோன் புரிந்து கொள்வதாகவோ அமையாத ஒருதலைத் தன்மை அமைந்திப்பதை நாம் காணமுடியும் அதுமட்டுமன்றி இருசாராரிடத்தில் ஒருவரை மட்டும் மிகுத்துப் பாடும் தன்மையும் அப்பாடல்களில் காணப்பெறும். எனவே சிறப்பில்லாத கைக்கிளைப் பொருண்மை மருட்பாவிற்குரியதாக இருந்ததால் அப்பாவகை வளர்ச்சி பெறாதநிலை ஏற்பட்டிருக்கக் கூடும்.

நால்வகைப் பாக்களிலும் பெரும்பான்மையான பாக்கள் இன்று வழக்கொழிந்து இருக்கும் நிலையில் மருட்பா வழக்கொழிந்திருப்பது வியப்பிற்குரிய ஒன்றில்லை. எனினும் தலைமைப் பாக்கள் பெருவழக்கினதாக இருந்த காலத்தும் இம் மருட்பா வழக்குடையதாக இருக்கவில்லை என்பதும் அப்பொழுதே அது வழக்கொழிந்திருந்தது என்பதுமே ஆய்விற்குரியனவாக அமைகின்றன.

# நேமிநாதம் (சொல்லிலக்கணம்)

—முனைவர் பெ. சுயம்பு

## முன்னுரை

நேமிநாதம் குணவீரபண்டிதர் இயற்றியது. எழுத்து, சொல் எனும் ஈரிலக்கணங்களைக்கூறும் நூல். தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம் என்ற காலமுறைக்குரியது. இதன் சொல்லிலக்கணம் இங்கு ஆராயப்படுகின்றது.

## இயல் பகுப்பு

நேமிநாதத்தின் சொல்லதிகாரம் மொழியாக்க மரபு, வேற்றுமை மரபு, உருபு மயங்கியல், விளிமரபு, பெயர்மரபு, வினைமரபு, இடைச்சொல் மரபு, உரிச்சொல் மரபு, எச்சமரபு என ஒன்பது இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. இயல்களின் தொகையும் பெயரும் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தைப்படி எடுத்தது போன்று காணப்படுகின்றன. தொல்காப்பிய இயல்கள் கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் எனும் ஒன்பதுமாகும். கிளவி என்பதை நேமிநாதம் மொழி என்று குறிப்பிடுகின்றது. இரண்டும் சொல் எனும் பொருளை உணர்த்துவன என்று குணவீரபண்டிதர் கருதுகின்றார். அவரது கருத்துப்படி, மொழியாக்கமரபு தமிழ்த் தொடர்களின் அமைப்பையும் பொருளமைதியினையும் விவரித்த போதிலும், அவ்விலக்கணம் யாவும் சொல்லிலக்கணத்தின் கூறுகளே என்பதாகும். ஆனால் தொல்காப்பியமோ எழுத்து (1:7:24), சொல் (1:7:2), வடிவம் (2:5:5) போன்ற பல பொருட்களை உணர்த்தும் சொல்லாகக்கிளவி என்பதைப் பயன்படுத்துகின்றது. எனவே .கிளவியாக்கம் என்பதில் தொல்காப்பியம் தொடராக்கம் என்ற கருத்தில் கிளவி எனும் சொல்லைப் பயன்படுத்துகின்றது எனலாம். கிளவியாக்கச் செய்திகள் யாவும் சொற்கள் தொடர்களை அமைத்து வழங்குமாற்றை விவரிப்பனவாகும்.

நேமிநாதம் உருபுமயங்கியல் தவிர்த்த எட்டு இயல்களையும் மரபு என்று குறிப்பிடுகின்றது. மரபு வழிவரும் பழமையான தமிழிலக்கணத்தைத் தொகுத்துச் சுருக்கித் தரும் நூல் நேமி நாதமாகும்[1]. இந்நூல் தோன்றியதன் நோக்கமும் இதுவே என்பது ஆசிரியர் கருத்து.

........ மேவுமுடி

பெல்லா முணரா எழுத்தின் இலக்கணத்தைச்
சொல்லால் உரைப்பன் தொகுத்து (1)
விரித்துரைத்த நூல்களினும் வேண்டுவன கொண்டு
தெரித்துரைப்பன் சொல்லின் திறம் (27)

உருபு என்பதனை வேற்றுமை எனும் பொருளில் ஏற்று, உருபு மயங்கில் என்று நேமிநாதம் பெயரிடுகின்றது. வேற்றுமையினை உருபு என்று குறிப்பிடுதலைக் தொகையிலக்கணம் கூறுமிடத்தும் இந்நூலில் காணலாம்.

உருபுவமை உம்மை விரியன் அடைவே
உருபுவமை உம்மைத் தொகையாம் (88)

மொழியாக்க மரபு

தொல்காப்பியக் கிளவியாக்கச் செய்திகளுள், செலவு, வரவு, யாது, எவன் இயற்கைப் பெயரும், சுட்டுப் பெயரும், இயற்கைப் பொருளும் செயற்கைப் பொருளும் குறித்த சொற்கள் ஆகியவை தொடரில் வழங்கும் முறை மட்டும் இவ்வியலில் நீக்கப்பட்டுள்ளன. ஏனைச் செய்திகள் சுருக்கமாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. கிளவியாக்கத்தின் 62 நூற்பாச் செய்திகள் இங்கு 15 வெண்பாக்களாக வடிவம் பெற்றுள்ளன. தொல்காப்பியத்தை விடவும் செய்திகளை முறைப்படுத்தி விவரிப்பதில் இந்நூலில் சிறந்ததொரு திட்டம் (Scheme) காணப்படுகின்றது.

நுதலிப்புகுதல் எனும் உத்தியோடு இவ்வியல் தொடங்குகிறது.

விரித்துரைத்த நூல்களிலும் வேண்டுவன கொண்ட
தெரித்துரைப்பன் சொல்லின் திறம் (27)

அடுத்து, சொல்லிலக்கணத்தின் பகுப்பினைச்சுட்டும் வெண்பா இடம் பெற்றுள்ளது. இப்பகுப்பில் உள்ள முறைப் படியே செய்திகள் திணை, பால், வழு எனத்தொகுத்து இங்குத் தொகை, வகை, விரியாகக் கூறப்படுகின்றன. வேற்றுமை முதலியன தொடர்ந்து வரும் இயல்களில் விவரிக்கப்படுகின்றன.

ஏற்றதிணையிரண்டும் பாலைந்தும் ஏழ்வழுவும்
வேற்றுமை எட்டும் தொகையாலும் — மாற்றரிய
மூன்றிடமும் காலங்கள் மூன்றும் இரண்டிடத்தாற்
தோன்ற உரைப்பதாஞ் சொல், (28)

இத்தகு சொல்லிலக்கணப் பகுப்பினை நேமிநாதம் இளம் பூரணர் உரையிலிருந்து பெற்றிருக்கலாம்.

மற்று, அச்சொல் எனைத்து, வகையான் உணர்த்தினா னோவெனின், எட்டு வகைப்பட்ட இலக்கணத்தான் உணர்த் தினான் என்க. அவையாவன: இரண்டுதிணை வகுத்து, அத் திணைக்கண் ஐந்து பால் வகுத்து, எழுவகை வழு வகுத்து, எட்டு வேற்றுமை வகுத்து, அறுவகை ஒட்டு வகுத்து, மூன்று இடம் வகுத்து, மூன்று காலம் வகுத்து, இரண்டு இடத்தான் ஆராய்தல் (தொல்–சொல் 1)

திணையை விளக்கும் வெண்பா இளம்பூரணர் உரைச் செய்திகளை (தொல். சொல். 1,4) ஏற்று அமைந்ததாகும்.

மக்கள் நரகரே வானோர் எனும்பொருள்கள்
தொக்க உயர்திணையாம் தூமொழியாய்-மிக்க
உயிருள் ளனவும் உயிரில் லனவும்
செயிரில் அஃறிணையாம் சென்று (29)

அன், ஆன்; அள், ஆள்; அர், ஆர், ப; து று, டு; அ, ஆ, வ எனும் ஐம்பால் விகுதிகள் கூறப்படுகின்றன.[3] இவ்விகுதிகள் உயர்திணையில் படர்க்கை உருபனோடும் (அ, ஆ) சேர்த்து இந் நூலில் கூறப்படுகின்றன. ஆனால் தொல்காப்பியக் கிளவியாக்கம் ன், ள், ர், ப எனும் பால் விகுதியை மட்டுமே குறிப்பிடுகின்றது. தொல்காப்பியத்தின் மார் விகுதி இங்கு இல்லை. இவ்விகுதி பிற்கால மொழிவழக்கில் இன்மையால் விடப்படிட்ருக்கலாம்.

வழுக்களைத் தொகுத்துச் சுட்டும் வெண்பா இந்நூலின் சிறப்பியல்புகளுள் ஒன்றாகும்.

பாலே திணையே வினாவே பகர்மரபே
காலமே செப்பே கருதிடமே ... (32)

எதிர்வினா, உற்றதுரைத்தல், ஏவல், உறுவது கூற்று என்னும் நால்வகை விடைகளும் மறுத்தல்; உடன்படுதல் என்னும் இரண்டனைப் போன்று நேராக விடையிறுப்பனவல்ல எனினும் மறைமுகமாக விடையிறுத்தலால் விடைகளேயாகும் என்று நேமிநாதம் (33) கூறுகின்றது. இங்குச் சுட்டப்பட்டுள்ள அறுவகை விடைகளும் இளம்பூரணர் உரையில் (13) இடம்பெற்றுள்ளன. மேலும், இந்நூல் இளம்பூரணர் வகைப்படுத்தியது போன்று வினாவை வகைப்படுத்திக் கூறவில்லை. தொல்காப்பியம் விடை அமையும் விதங்களை (2:1:13-16) விவரித்து, வினா அமையும் விதங்களை விவரிக்காததால் இந்நூலும் வினாவில் பகுப்பினை அமைக்கவில்லை போலும்.

குடிமை, ஆண்மை, இளமை, மூப்பு, அடிமை, வன்மை, விருந்து, குழு, பெண்மை, அரசு, மகவு, குழவி, தன்மைதிரி பெயர், உறுப்பின் கிளவி, காதல், சிறப்பு, செறற்சொல், விறற் சொல், காலம், உலகம், உயிர், உடம்பு, பால்வரை தெய்வம், வினை, பூதம், ஞாயிறு, திங்கள், சொல் என்பன அஃறிணை யாகத் தொடரில் வழங்கும் என்று தொல்காப்பியம் (2:1:57, 58) கூறுகின்றது. இவற்றுள் இந்நூல் (35) குழூ, அடிமை, வேந்து, குழவி, விருந்து, வழுவுறுப்பு, திங்கள், மகவு, உயர்திணைப் பண்பு, உயிர், உறுப்பு, மெய் என்பனவற்றை மட்டும் கூறுகின்றது. உறுப்பின் கிளவிக்கு இளம்பூரணர் குருடு வந்தது என்று சான்றுரைக்கின்றார். அவரது விளக்கம் இந்நூலில் 'வழுவுறுப்பு' என்று வடிவம் பெற்றுத் தொல்காப்பியத்தைவிடவும் விளக்கமாக அமைந்துள்ளது. குடிமை, ஆண்மை போன்ற பண்புகளைக் குண வீரபண்டிதர் உயர்திணைப் பண்பு என்பதில் சேர்த்துள்ளார்.

தொல்காப்பியத்தின் 'சிறப்புப் பெயர்' எனும் தொடரை நேமிநாதம் (40) 'சாதி முதலாஞ் சிறப்புப்பேர்' என்று விளக்குகிறது. இவ்வாறே, 'பெண்ணாண் ஒழிந்த பெயர்தொழில் ஆகிய சொல்' (38) என்பதும், 'பெயரினும் தொழிலினும் பிரிபவை' எனும் தொல்காப்பியத் தொடருக்கு (2:1:50) நல்ல விளக்கமாகக் காணப்படுகிறது.

உயர்வும் இழிபும் உவப்பும் சிறப்பும்
அயர்வில் திணைபால் மயங்கும் (37) —இதனை
விளக்கும் நேமிநாத வுரையாசிரியர்,

"உவப்பினு முயர்வினு மிழிப்பினுஞ் சிறப்பினும்
பாலுந் திணையு மயங்குதல் வரையார்"
என்பவாகலின் — என்று முந்தை இலக்கண
நூலொன்றிலிருந்து சான்று காட்டுகின்றார்.[4]

வேற்றுமை மரபு

இவ்வியல் தொல்காப்பிய வேற்றுமையியலின் சுருக்கமாக உள்ளது. தொல்காப்பியம் வேற்றுமையுருபு, அதன் பொருள் ஆகிய இரண்டையும் சுட்டி, அவ்வேற்றுமைப் பொருளின் தொடரமைப்புக்களின் பட்டியலையும் தருகின்றது. நேமிநாதம் தொடரமைப்புக்களின் பட்டியலை நீக்கிப் பிறவற்றைக் கூறு கிறது.

ஏழுவாய் வேற்றுமையை விளக்குமிடத்து (43), 'ஆறு பயனிலையும் ஏற்கப்படுதல்' என்று நேமிநாதம் கூறுகிறது. இவ்வாறும் யாவை என்பது இந்நூலை மட்டுமே அறிமுக நிலையில் பயில்வார்க்குப் புலனாகாது. ஏற்கெனவே இலக்கணப் புலமை உடையோர்க்கே இந்நூல் பயன்படத்தக்கதாகும். இக்குறை இந்நூலில் ஆங்காங்கே காணப்படுகிறது. சுருக்கிக் கூறுதல் எனும் நோக்கத்தின் விளைவிது. ஆறு பயனிலை என்பது தொல்காப்பியத்தை (2:2:5) உட்கொண்டதாகும்.

மூன்றாவதன் உருபுகளாக ஆன், ஒடு என்பவற்றை இந்நூல் (44) சுட்டுகின்றது. மேலும் ஒரு உருபு ஓடு என்று வடிவமாற்றமடைதலையும் பெயர் மரபில் (62) கூறுகிறது.

ஆன் உருபு தொல்காப்பிய மொழியில் இடப்பொருளில் பரவலாகவும் [1:6:17, 7:11, 8:21] கருவிப் பொருளில் அருகியும் (8:4:58) காணப்படுகின்றது. சங்க இலக்கியங்களில் கருவிப் பொருளில் வழங்குகிறது. எனவே முற்காலத்தில் இடப்பொருளில் வழங்கிய இவ்வுருபு நாளடைவில் கருவிப் பொருளுக்குரியதாகியது எனலாம். இளம்பூரணர் உரையில் ஆன் உருபு கருவிப் பொருளில் வருதல் சான்று காட்டப்படு கிறது. எனவே இளம்பூரணர் கருத்தை ஏற்று நேமிநாதம் இதனைக் கூறுகிறது எனலாம்.

ஐந்தாம் வேற்றுமைப் பொருளை எடுத்துக் கூறாமல் அது 'ஒரு நான்கிடத்து' வருமென இந்நூல் (45) கூறுகிறது. இளம்பூரணர் (75), 'ஐந்தாம் வேற்றுமை நான்கு பொருள் உடைத்து, பொரூஉப் பொருளும் நீக்கமும் எல்லையும் ஏதுவும் என' என்று உரைக்கின்றார் இந்நான்கு பொருளையும் சுட்டும் முந்தையிலக்கண நூலொன்றின் நூற்பாவினை நேமிநாத உரையாசிரியர் எடுத்துரைக்கின்றார்.[5]

உவம நீக்க மெல்லை யேதுவென்
றவைநான் கென்ப வைந்தா முருபே

இதனினிற்றிது, எப்பொருளாயினும் கொள்ளும் எனும் தொல்காப்பியத் தொடர்கள் இந்நூலில் இதனினித்தன்மைத்திது, நபொருளை ஏற்கும் என்று முறையே விளக்கமாகச் சுட்டப்படு கின்றன.

உருபு மயங்கியல்

வேற்றுமைப் பொருள் மயங்குதலை இந்நூல் (47)
'வேற்றுமை ஒன்றன் உரிமைக்கண் வேறொன்று
தோற்றல் ... என்பதில் அடக்கிக் கூறுகின்றது. உருபு தனக்குரிய பொருளில் அன்றி, வேறு வேற்றுமைப் பொருளிலும் வருதல் தமிழ் வழக்காகும். இத்தகு வழக்கு வரையறையற்றது என்று நேமிநாதம் கருதியதால், இன்னின்ன வேற்றுமைகள் தம்முள் மயங்கும் என்று பட்டியலிடவில்லை. தொல்காப்பியம் சிலவற்றைப் பட்டியலிட்ட போதினும், அப்பட்டியலில் அடங்காத பிறவும் இருக்கலாம் என்பதை உடன்பட்டுப் புறனடை நூற்பாக் களை யாத்துளது. தொல்காப்பியத்தில் 35 நூற்பாக்களிலும் இங்கு 3 வெண்பாக்களிலும் இச்செய்தி கூறப்படுகிறது.

'ஒன்றன்பேர் ஒன்றற் குரைப்பதாம் ஆகுபெயர்' – எனும் விளக்கம் (49) இந்நூலின் சிறப்புச் செய்தியுள் ஒன்றாகும்.[6] மேலும், 'தம்முதலிற் சேர்தலோ - டொன்றாத. வேறொன்றிற் சேர்தலென இரண்டாம்'' என்று விடாத ஆகுபெயர்' விடாத ஆகுபெயர் எனும் இருவகைகளை மட்டும் இந்நூல் குறிப்பிடு கிறது. இது ஒரு பேரளவுப் பகுப்பு முறையாகும். இப்பகுப்பினைத் தொல்காப்பியத்தின், 'தத்தம் பொருள் வயின் தம்மொடு சிவணலும், ஒப்பில் வழியாற் பிறிது பொருள் சுட்டலும்' எனும்

நூற்பால் (2:3:32) பகுதியில் காணலாம். எனினும் தொல் காப்பியம் மேற்கொண்டுள்ள நுண்பகுப்பு (2:3:31) இந்நூலில் இடம் பெறவில்லை.

ஆகுபெயர் ஈறு திரிந்து வருதலு முண்டு என்று நேமிநாதம் (49) குறிப்பிடுகின்றது.[7]

விளிமரபு

தொல்காப்பிய விளிமரபுச் செய்திகள் (37 நூற்பாக்கள்) செம்மையாக ஈறுகளின் அடிப்படையில் தொகுத்துத் (6 வெண் பாக்களில்) தரப்பட்டுள்ளன. உயர்திணையில் உயிர், ன், ர், ல், ள் ஆகிய ஈறுகளைக் கொண்ட பெயர்கள் விளியேற்றலை அண்மை, அளபெடை, முறை, பண்பு, தொழில் எனும் உட் பகுப்புடன் ஒவ்வொரு வெண்பாவில் செறித்து இந்நூல் விவரிக் கின்றது. இறுதி வெண்பா விரவுப் பெயரும் அஃறிணைப்பெயரும் விளியேற்றலைக் கூறுகிறது. சேய்மையில் பெயர்களிலுள்ள எழுத்துக்கள் தமக்குரிய மாத்திரையினின்று மிக நீண்டு ஒலிக்கும் எனும் செய்தியும் இங்கு இடம் பெறுகிறது. விளியேலாத பெயர் களைக் குறித்த செய்தி நேமிநாதத்தில் இடம் பெறவில்லை. இது ஒரு குறையே (ஈறுகளின் அடிப்படையில் தொகுத்தால் விளியே லாதனவும் உட்படுதலியலும்).

"முன்னிலைக்கண் ... விளியேற்கும்' என்பது சிறந்த விளக்கமாகும்.

பெயர் மரபு

நேமிநாதம் பெயர்ச் சொற்களை உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர், விரவுப் பெயர் (விரவுத்திணைப் பெயர்) எனத் திணை அடிப்படையில் பகுத்துக் கூறுகிறது.

சுட்டு, வினா, ஒப்பு, பண்பு முதலியவற்றின் அடிச்சொற் களோடு ன், ள், ர் ஆகிய பால் விகுதிகள் இணைந்து உயர் திணைப் பெயர்கள் அமைதலை இந்நூல் (57) கூறுகின்றது. பகுதியோடு விகுதியை இணைத்துச் சொல்லாக்கும் ஆக்கமுறை விளக்கம் நேமிநாதத்தில் சிறப்பாக இடம் பெற்றுளது. 'சுட்டு முதலாகிய அன்னும் ஆனும்' என்பது போன்ற சில ஆக்குமுறை

விளக்கம் தொல்காப்பியத்திலும் இடம் பெற்றுள்ள போதிலும், அவன், இவன், உவன், அவள், இவள், உவள் போன்ற சொற்களை எடுத்துரைக்கும் தரவு (data) முறையே அந்நூலில் மிகுதியாகப் பயின்று வருகின்றது. எனவே இங்கு நேமிநாதம் புதிய பாதையில் செல்கிறது எனலாம்.

அஃறிணைப் பெயரும் உயர்திணைப் பெயரும்கள் விகுதி ஏற்றுப் பன்மை உணர்த்தும். கள் விகுதி ஏலாத நிலையில் அஃறிணைப் பெயரும் விரவுப் பெயரும் பெயர், வினைச்சொற்களின் சார்பினால் பால் உணர்த்தும் (63).

பசுக்கள் ஆண்கள்
ஒரு பசு பசு வந்தன
சாத்தி வந்தது சாத்தி வந்தாள்

அஃறிணைப் பெயர்கள் கள் விகுதி ஏற்றுப் பன்மை உணர்த்துதலைத் தொல்காப்பியம் (2 : 5 : 15) கூறுகிறது. மக்கள் எனும் உயர்திணைப் பன்மைப் பெயர் (2 : 5 : 9) இடம் பெற்றபோதிலும் கள் விகுதி உயர்திணையில் வருதலைத் தொல்காப்பியம் கூறவில்லை. மக்கள் என்பதனைப் பகாப்பதமாக அந்நூல் கொள்கிறது எனலாம். மேலும், தொல்காப்பியக் காலத்தில் உயர்திணையில் கள் விகுதி பயலவில்லை என்றும் அதன் தொடக்க நிலையே மக்கள் எனும் சொல் என்றும் கூறலாம். சங்க இலக்கியத்தில் கள் விகுதி இருதிணைப் பெயர்களிலும் இடம்பெற்றுள்ளது. எனவே பிற்கால வழக்கை ஏற்று நேமிநாதம் இதனை இலக்கணமாக்கியுளது.

அரசர்கள் (கலித்தொகை 25)
கண்கள் (பரிபாடல் 7)

கள் விகுதி இருதிணையிலும் பன்மை உணர்த்தச் சேர்க்கப் படுதலை அவிநயத்திலும் காணலாம்.

கள்ளென் இறுதி இருதிணைப் பன்மையுங்
கொள்ளும்... (அவிநயம்)

தன்மைப் பெயர்கள் இந்நூலிலும் (58) தொல்காப்பியத்தில் போன்று உயர்திணைப் பெயர்களுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

தொல்காப்பியத்திலுள்ள அவ், இவ், உவ், எல்லாம், எல்லீரும், பல, சில, இறைச்சிப் பொருளில் பெயர் அமைதல் ஆகிய செய்திகள் இங்கு நீக்கப்பட்டவையாகும். இவற்றுள் அவ் முதலிய மூன்றும் பிற்கால வழக்கில் அருகியமையால் நீக்கப் பட்டிருக்க வேண்டும். ஏனையவை சுருக்கம் கருதிக் கூறப் படவில்லை.

பெயர் > பேர், பெயர்த்து > பேர்த்து, ஒடு > ஓடு, நீயிர் > நீர், எவன் > என், என்னை, யா- > ஆ, பொழுது, போது எனும் மாற்றுருபுகளின் தோற்ற விளக்கத்தை நேமிநாதம் (62) குறிப்பிடுகின்றது. இவற்றுள் "என்னை" என்பது இக் காலத்தில் 'என்ன' என்று வழங்குகிறது. இவ்விளக்கத்தினை ஒலிமாற்றம் என்று கருதாமல், பெயர்களின் மாற்றுருபு என்ற கருத்தினால் நேமிநாதம் பெயர்மரபில் கூறியுளது.

பெயர் மரபின் தொடக்க வெண்பா (56),

'பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல்
இயற்சொன் முதனான்கும் எய்தும்' என்பது

தொல்காப்பியம் எச்சவியலில் (1-6) கூறிய இயற்சொல் முதனான்கும் பற்றிய குறிப்பினைத் தருகிறது. பெயர் முதலிய நால்வகைச் சொற்கட்கும் பொதுவான இயற்சொல் முதலானவற்றைப் பொதுவியலான எச்சவியலில் தொல்காப்பியம் கூறுகிறது. ஆனால் இந்நூலோ பெயர் முதலிய நான்கின் முதல் வகையினைக் கூறுமிடத்தே சுட்டிச் செல்கின்றது. இங்கு இயற் சொன் முதனான்கு யாவை? அவற்றின் விளக்கம் யாது? எனும் செய்திகள் விவரிக்கப்படவில்லை. எனவே ஏற்கனவே குறிப் பிட்டவாறு, இலக்கணம் தெரிந்தவர்க்குச் சுருக்க நூலாகவே இது விளங்குகிறது. அறிமுகமானவர்க்குப் போதிக்கும் நூலன்றிது.

பெயர் மரபு தொல்காப்பியப் பெயரியல் (43 நூற்பாக்கள்) செய்திகளை 9 வெண்பாக்களில் சுருக்கிக் குறிப்பிடுவதாகத் தோற்றமளிக்கிறது.

**வினை மரபு**

நேமிநாதம் (65) வினைச்சொல் இலக்கணத்தை ஒரே வெண்பாவில் தொகுத்துக் கூறுகிறது.

இறப்பு நிகழ்வெதிர்வாங் காலங்க ளேற்றுங்
குறிப்பும் உருபேற்றல் கூடாத் - திறத்தவுமாய்
முற்றெச்ச மென்றிரண்டாய் மூவகைத்தாய் மூன்றிடத்து
நிற்கும் வினைச்சொற்கள் நேர்ந்து.

நேமிநாதம் வினைச்சொற்களைப் பகுத்துக் கூறும் முறை தொல்காப்பியத்தினின்றும் சிறிது வேறுபட்டதாகும்.

- வினைச்சொல்
  - வினை
    - உயர்திணை
      - தன்மை
      - படர்க்கை
    - அஃறிணை
      - படர்க்கை
    - விரவுவினை
      - முன்னிலை
      - வினையெச்சம்
      - பிற
  - வினைக்குறிப்பு
    - உயர்திணை
    - அஃறிணை

பிற = பெயரெச்சம், அன்று, அல்ல, வேறு, இல்லை, உண்டு, வியங்கோள்.

தொல்காப்பியம் உயர்திணை. அஃறிணை, விரவு வினை, என்று பகுத்து உயர்திணையிலும் அஃறிணையிலும் வினை வினைக்குறிப்பு என்ற உட்பகுப்பினை மேற்கொண்டுளது.

அன்று, அல்ல எனும் இரண்டும் தொல்காப்பியத்தில் அஃறிணை வினைக் குறிப்புக்களாகும் (2 : 6 : 23). உண்டு தொல்காப்பிய வினையியலில் இடம்பெறவில்லை. ஆனால் அதன் மொழியில் அஃறிணையில் வழங்குகிறது.

ஓரன பாகு மிடனுமா குண்டே (1 : 2 : 24)

நேமிநாதம் (66) தன்மை ஒருமையினைத் தனித்தன்மை என்றும் பன்மையினை உளப்பாட்டுத் தன்மை என்றும் சுட்டு கிறது. இது இளம்பூரணர் முதலிய தொல்காப்பிய உரையாசிரி யர்களின் கருத்தாகும்.

உரைப்பன் (1) தெரித்துரைப்பன் (27) என அன் விகுதி தன்மையொருமையில் நேமிநாத மொழியில் இடம்பெற்றுளது. எனினும் நேமிநாதம் இவ்விகுதியைக் கூறவில்லை இவ்விகுதி

குறித்துத் தொல்காப்பிய உரைகளிலும்[8] இலக்கியங்களிலும் (புறநானூறு 201, குறுந்தொகை 43) சான்றுகள் உள்ளன. பிற இலக்கணிகளின் கருத்துக்கும் மொழி வழக்குக்கும் உடன்பாடின்றித் தொல்காப்பியக் கருத்துக்கே நேமிநாதம் முன்னுரிமை தருகிறது என்பது இதன்வழிப் புலனாகிறது[9].

பெயரெச்சம், வியங்கோள் என்ற சுட்டுதலைத் தவிர, அமைப்பு விளக்கம் இந்நூலில் இடம்பெறவில்லை. ஆனால் செய்து, செய, செய்யா, செய்யிய, செய்தென, செய்பு, செயின், செயியர், செயற்கு, பின், முன், பான், பாக்கு எனும் வினையெச்ச வாய்பாடுகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

பான், பாக்கு வினையெச்சங்கள், உண், சேர், பொரு போன்ற வினைப்பகுதி முன்னிலை ஒருமை, வியங்கோள் இருதிணை ஐம்பால் மூவிடத்தும் வருதல் எனும் செய்திகளை நேமிநாதம் இளம்பூரணர் உரையைப் பின்பற்றிக் கூறுகின்றது[10]

தொல்காப்பியத்தின் செய்யம்மன முற்று, மார்விகுதி, செய்யூ, கால், கடை, வழி, இடத்து எச்சங்கள் இந்நூலில நீக்கப்பட்டுள்ளன.

வினைமரபு எனும் இவ்வியலும் ஏனைய இடங்களைப் போன்று தொல்காப்பியச் செய்திகளின் சுருக்கமாகக் காணப் படுகின்றது.

## இடைச்சொல் மரபு

இவ்வியல் 5 வெண்பாக்களை உடையது. முதல் வெண்பா இடைச்சொல்லின் வகைகளைக் கூறுகிறது. சாரியையாய் ஒன்றல், உருபாதல், தம் குறிப்பில் நேரும் பொருளாதல், நின்று அசையாய்ப் போதல், வினைச்சொற்கு ஈறாதல், இசைநிறைத்து மேவல் என இடைச்சொல் ஆறு வகைப்படும் [77] இடைச் சொல் இந்நூலில் கூறப்படவில்லை.

தொல்காப்பியத்தின் 'ஒப்பில் வழியான் பொருள் செய்குந' எனும் ஏழாம் வகை, அந்நூலில் [2:7:30] 'ஒப்பில் போலியும் அப்பொருட்டாகும்' என்று (அசையாகும் என்று) கூறியதால் அசை நிலையுள் அடங்கும். எனவே நேமிநாதம், அதனை

வேறொரு வகையாகக் கூறவில்லை என்று நேமிநாத உரை கூறுகிறது. போலும், அன்ன போன்ற ஒப்புருபுகள் ஒப்புமைப் பொருளை மட்டுமின்றி, உரையசையாகவும் (அவன் வருவான் போலும்) வருதலையே தொல்காப்பியம் 'ஒப்பில் போலியும் அப்பொருட்டாகும்' என்கிறது. எனவே ஒப்புருபுகளை அசை நிலையுள் அடக்குதல் ஏற்புடைத்தன்று.

உம், ஏ, மன், கொன், தில், என, என்று, மன்ற, தஞ்சம், என்றா, எனா, ஓ ஆகிய இடைச்சொற்கள் உணர்த்தும் பொருட்கள் விவரிக்கப்படுகின்றன. ஓகாரம் எண், ஈற்றசை உணர்த்துதல் இளம்பூரணரிடமிருந்து (தொல், சொல்290) பெற்றதாகும். இவ்விடைச்சொல் பிரிநிலை, ஐயம் உணர்த்து தலும் ஏகாரம் பிரிநிலை உணர்த்துதலுமாகிய தொல்காப்பியம் செய்தி நேமிநாதத்தில் இல்லை.

உரிச்சொல் மரபு

ஒண்பேர் வினையோடுந் தோன்றி உரிச்சொலிசை
பண்புகுறிப்பாற் பரந்தியலும் — எண்சேர்
பலசொல் லொருபொருட் கேற்றுமொரு சொற்றான்
பலபொருட் கேற்றவும் பட்டு (82)

இவ்வெண்பா உரிச்சொல் இலக்கணத்தைத் தொகுத்துக் கூறுகின்றது.

கம்பலை, சும்மை, கலி, அழுங்கல்; கதழ்வு, துனைவு; நம்பு, மேவு; கமம், துனைவு எனும் ஒரு பொருட் பன்மொழி களும் பொன்மை, கடி எனும் பலபொருளொருசொற்களும் உரிச்சொல் மரபில் இடம்பெற்றுள்ளன. மேலும் வம்பு, நொடை, வெம்மை, வியல், அரி, எய்யாமை, கொம்மை, நளி, ஏ, மல்லல், வயம், புரை, புனிறு, குரை, எல் ஆகிய சொற்கட்கு ஒரு பொருள் மட்டுமே கூறப்பட்டுள்ளது. தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள 120 உரிச்சொற்களுள் பலவற்றுக்கு ஒரு பொருளே கூறப்பட்டுளது. இத்தகு விளக்கம் ஒரு பொருட் குறித்த பல சொல்லாகவும் பல பொருட் குறித்த ஒரு சொல் லாகவும் உரிச்சொல் வரும் எனும் வரையறைக்கு ஏற்றதாக இல்லை. ஆனால் தொல்காப்பிய மொழியில் புரை எனும் சொல் குற்றம் எனும் பொருளிலும் ஒப்புப்பொருளிலும்

(3:3:17,4:5) இடம் பெற்றுள்ளது. எனவே தொல்காப்பியர் (2 8:4) 'புரை உயர்வு, என்று இலக்கணம் செய்தாலும், அச்சொற்கு மேலும் சில பொருள் உண்டு என்பதைத் தெரிந்திருந்தது எனவும் வழக்கில் அருகிய பொருளை மட்டுமே அந்நூல் கூறுகிறது எனவும் கொள்ளலாம். அவ்வாறாயின் ஒரு பொருள் ஒரு சொல் என்று கூறப்பட்டனவும் உண்மையில் பலபொருட்கு உரிய ஒரு சொல் வகையினவே ஆகும். வம்பு, வெம்மை, எய்யாமை, நளி, புரை, அரி, வியல் போன்ற சொற்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பொருளில் சங்க இலக்கியத்தில் வழங்குகின்றன.

நளி என்பது செறிவு, பெருமை ஆகிய பலபொருளை உணர்த்தும் சொல்லாகத் தொல்காப்பியத்தில் [2:8:22,25] கூறப்பட்டுள்ளது. ஆனால் இங்குச்(85) செறிவு எனும் பொருள் மட்டுமே கூறப்பட்டுள்ளது.

கொம்மை = இளமை, பொன்மை = நிறம், பசலை நொடை = விலை, குரை = ஒலி. எல் = விளக்கம் என்பன நேமிநாதம் கூறும் புதிய உரிச்சொற்களாகும். இவற்றுள் எல் என்பதனைத் தொல்காப்பியம் இடைச்சொல்லாகக் கருதுகிறது. ஆனால் இச்சொல் இடைச்சொற்குரிய சார்புப் பொருளன்றி, அகராதிப்பொருளை உணர்த்துதலால் நேமிநாதம் உரிச்சொல் என்றுரைத்தல் ஏற்புடையதே.

தொல்காப்பியம் கூறும் சொல்லின் பொருட் புலப்பாட்டு நெறி முறைகள் நேமிநாதத்தில் கூறப்படவில்லை.

எச்சமரபு

இவ்வியலில் தொகைச்சொற்களும் பொருள்கோள்களும் கூறப்பட்டுள்ளன. மேலும் செய்யுள் விகாரம், செய்யப்பாட்டு வினை வழக்கு, முன்னச்சொல் வழக்கு, சொல் பொருள் உணர்த்தும்விதம், மந்திரம், செய்யும் எனும் வாய்பாட்டுப் பெயரெச்ச வடிவமாற்றம், இட்டுரைத்தல், இடைச்சொல் ஈறு திரிதல், முற்றும்மை எச்சவும்மையாதல், தொன்மொழி ஆகிய செய்திகள் வெண்பாக்களில் கூறப்படுகின்றன. இவற்றுள் செயப்பாட்டுவினை. செய்யும் பெயரெச்சம் ஆகிய வினையிய

யிலும் சொல் பொருள் உணர்த்தும்விதம் பெயரியலிலும் இடைச் சொல் ஈறுதிரிதல், முற்றும்மை எச்சவும்மையாதல் இடையியலி லும் தொல்காப்பியத்தில் இடம் பெற்றவையாகும்.

தொகைச் செய்திகள் இளம்பூரணர் உரையினின்றும் (தொல்.சொல்.407-411) பெற்றவையாகும். 'தொக்கலிடத்து-ஏற்ற, இருசொல்லும் ஒன்றாம் இலக்கணத்தாற் பல்சொல் ஒரு சொல்லாய்ச் சேறலும் உண்டு' — என்பது தொகைக்கு நேமிநாதம் (87) கூறும் வரையறையாகும். இவ்வரையறை, 'எல்லாத்தொகையும் ஒரு சொல் நடைய, எனும் தொல்காப்பியக் கருத்தோடு தொடர்புடையது.

உருபுவமை உம்மை விரியின் அடைவே
உருபுவமை உம்மைத் தொகையா — மொருகாலந்
தோன்றின் வினைத்தொகையாம் பண்புமிகு பேரொட்டுந்
தோன்றுமேற் பண்புத்தொகை (88)

இவ்வெண்பாவில் 'விரியின் காலந்தோன்றின், பேரொட்டு' என்பன இளம்பூரணர் கருத்துக்களாகும்.

தொல்காப்பியம் (2:9:22),

பண்பு தொகுவரூஉம் கிளவி யானும்
உம்மை தொக்க பெயர்வயி னானும்
வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்
ஈற்று நின்றியலும் அன்மொழித் தொகையே

என்று கூறுகிறது. இளம்பூரணர், '...ஒழிந்து நின்ற உவமைத் தொகையும் வினைத்தொகையும் பற்றிப் பிறக்கும் அன்மொழித் தொகை...' என்று உரைக்கிறார். இவ்வுரை நேமிநாதத்தில்(89),

ஏனைத் தொகைச்சொற்கள் ஐந்தின் இறுதிக்கண்
ஆன பெயர்தோன்றின் அன்மொழியாம் ..

என்று இலக்கணமாகிறது.

தொகைச்சொற்கள் பொருள் உணர்த்துதலைக் காட்டும்
......... முன்மொழிதான்
காலம் இடத்தாற் கருத்தொடுஞ் சேர்த்தறிதல்
மேலையோர் கண்ட விதி. — இந்த வெண்பா

(90), 'முன்மொழி பின்மொழியாதல் இடமும் காலமும் என இருவகையால் உணரப்படும்' எனும் இளம்பூரணர் கருத்தினின்று பெறப்பட்டதாகும்.

அடிமொழி, சுண்ணம், நிரனிறை, விற்பூட்டு, அடிமறி, யாற்றுவரவு, தாப்பிசை, மொழி மாற்று, அளைமறி பாப்பு ஆகிய ஒன்பது பொருள்கோளின் பெயரும் நேமிநாதத்தில்(94) இடம் பெற்றுள்ளன. இவற்றுக்கு விளக்கம் இல்லை. சுண்ணம், நிரனிறை, அடிமறி, மொழி மாற்று எனும் நான்கு மட்டுமே தொல்காப்பியத்தில் விளக்கப்படுகின்றன.

முடிவுரை 1. நேமிநாதம் ஒரு சுருக்க இலக்கண நூல். 2. முந்தை இலக்கண நூற்கருத்துக்களுள் வேண்டுவன மட்டும் கொண்டு கூறுதாக அந்நூல் கூறுகிறது. எனினும் அது தொல்காப்பியத்தின் சுருக்கமாக உளது. தொல்காப்பியம், இளம்பூரணர் உரை, பிறநூல் (அவிநயம்) பிற்கால மொழி வளர்ச்சி என்ற முறையில் நேமிநாதம் முன்னுரிமை தந்து, இலக்கணம் கூறுகிறது. 'தொல்காப்பியக் கருத்து + இளம்பூரணரின் உரைச் செய்தி' என்பதே நேமிநாதம் என்ற நூலின் சொல்லதிகாரம் எனின் மிகையாகாது.

# பொழுதும் திணையும் - புதிய பார்வை

*கானகர். ச. பாலகதிரேசன்*

செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி, ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர் கண்ட பொருளதிகாரத்துக் கூறப்பெறும் அகத்திணையியலில், முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்திணைகட்கும் பெரும் பொழுதுகள் கூறப்பெற்றுள்ளன. முல்லைக்குக் காரும், குறிஞ்சிக்குக் கூதிரும் பனியெதிர்பருவமும், பாலைக்கு நிலம் காட்டாது பின்பனியும் வேனிலும் ஆகிய பொழுதுகள் மட்டும், குறிக்கப்பெற்றிள்ளன. மருதம், மற்றும் நெய்தலுக்கு எல்லாப்பருவமும் குறிக்கப்பெற்றுள்ளன. ஆகலின், கார், கதிர், முன்பனி, பின்பனி, வேனில் (பிற்றை நாளில் இளவேனில், முதுவேனில் எனப்பகுத்தறியப் பெற்றது) ஆகிய பருவப் பிரிவுகளே கூறப்பட்டுள்ளமை தேற்றம். பிற்றை நாளில் வழக்கிற்கு வந்து, இற்றை நாள் வரை நிலவும் பனிரண்டு மாதப்பகுப்புகளாகிய சித்திரை முதல் பங்குனி ஈறாய மாதங்களின் பெயர்கள் தொல்காப்பியத்திற் குறிக்கப் பெறவில்லையென்பதூஉம் நெல்லிக் கனியே. எனினும் உரையாசிரியர்கள் யாவராலும் ஒப்புக் கொள்ளப் பெற்று இன்று மரபாகிய வழி,

கார் என்பது ஆவணி, புராட்டாசி மாதங்களையும்
கதிர், ஐப்பசி, கார்த்திகையையும்
பனியெதிர்பருவம், மார்கழி, தை எனவும்
பின்பனி, மாசி, பங்குனி என்றும்
இளவேனில், சித்திரை, வைகாசி ஆகவும்
முதுவேனிற்காலம் ஆனி மற்றும் ஆடி திங்கள்களையும்

குறிக்கின்றன எனும் அடிப்படையில், முல்லைத் திணைக்குக் கார் காலமும், குறிஞ்சிக்குக் கூதிரும் பனியெதிர் பருவமும், பாலைக்குப் பின்பனி, இளவேனில் மற்றும் முதுவேனிலும், மருதம், நெய்தலிவற்றிற்கு அறுபருவமும் உரித்தென மொழிப.

அறு பருவங்களில் ''கார்'' ப்பருவத்தை முதலிற்குறித்து அதற்குத் திணையாக 'முல்லை' யை வைத்துள்ள முறைமையால்,

முல்லையே முதற்றிணையென்று கொள்வது சாலும். நான்வகை நிலங்களைக் குறிக்கும்போழ்து 'மாயோன் மேய காடுறை உலகம்' என முல்லையே முதலில் நிறுத்தப்பட்டுள்ளமையும் அதனை உறுதிசெய்யும். ஆனால் நிமித்தம் கூறும் சூத்திரத்தில் 'புணர்தல் எனுங்குறிஞ்சித் திணை உரிப்பொருளை முதலிற் கூறியது மட்டு மன்றி அடுத்து முறையே பாலை, முல்லை, நெய்தல், மருத உரிப்பொருட்கள் கூறப்பட்டுள்ள வகை சிறிது தடுமாற்றத்தைத் தருவதும் உண்மையே. ஆனால் எடுத்துக்கொள்ளப் பெற்றுள்ள ஆய்விற்கு எது முதன்மையென்பது எனுங்கேள்வி ஏலாதது.

உரிப்பொருட்குத் தலைமை யீந்து, பாடலுட்பயின்றவை நாடி, அகத்திணைப் பாடல்கள் தொகுக்கப்பெற்றுள்ளன. அவ் வகத்திணைப் பாடல்களுக்கான முதற்பொருளும் கருப் பொருளும் உரிப்பொருள் நிமித்தங்களை "பாடல் சான்ற புலனெறி வழக்கம்" கொண்டு காட்டும் பின் புலங்களாகக் காட்சியளிக்கின்றன என்றளவில் விருந்தியல் (Romanticism) நோக்கு முதன்மைபெற்று பின்புலக் காட்சிகளின் முழு இயல்பும் சால்பும் மறைந்தே உள்ளன. பிறமொழி இலக்கி யங்களோடு முறையோடு ஒப்பிட்டு நோக்குங்கால் இயற்கையாகிய நிலமும் பொழுதும் ஆங்கு நிலைத்துள உயிரி னங்களும் சங்க இலக்கியத்துள் சிறப்பாக அகத்துறைப் பாடல் களில் இன்றைய அறிவியற்கருத்துகட்கு முற்றிலும் இயைபாகக் காட்டப்பெற்றுள்ளன என்பதே ஆய்வின் கருதுகோள் ஆகும். அத்தகு ஆய்விற்புகுமுன் சில அடிப்படைக் கருத்துக்களை அகத்திற்கொள்வது சாலச் சிறப்புடையதும் தேர்ந்து தெளி தற்கும். தெளிந்து மகிழ்தற்கும் உரியதாகும்.

முதலாவதாக, ஆயப்பெறும் பெரும்பொழுதுகள் ஆறும் - ஏன் - சிறுபொழுதுகள் ஆறும், உலக வழக்கில் நானிலமாயினும் ஐவகை நிலமாயினும் அனைத்திற்கும் உரியன என்பதாகும்.

அடுத்ததாக, உரியபொருட் டலைமைப் பகுப்புச் சிறிது பின்னால் வைக்கப்பெற்று, முதற்பொருட்களும் கருப்பொருட் களும் முதன்மைப்படுத்தப்பெறுகின்றன என்பதாகும். இதனை யொட்டி, முதல், கருப்பொருட்கள் சிறப்பிடம் பெறுகின்ற சங்கப் பாடல்கள் மட்டுமே ஆய்வுக்குள் அமைகின்றன.

மூன்றாவதாக, எடுத்துக்கொள்ளப்பெற்றுள்ள ஆய்வு முதல், கருப்பொருட் கூறுகளை இற்றைநாள் அறிவியல் குறிப்பாக பூவியல் மற்றும் வானியல், மட்டுமல்லாது நிலைஉயிரியல், விலங்கியல் எனும் பல்வேறுகான் இயற்கருத்துக்களுடன் ஒப்பாய்வு செய்வதாக விளங்கும் என்பதும் இவண் குறிக்கற் பெறலாகின்றது.

இனி, நிலப்பகுப்பில் முதன்மையாயும் பருவப்பகுப்பிலும் முதன்மையாகவும் குறிக்கப்பெற்றுள்ள முல்லைத்திணைப் பாடல்கள் ஆய்வுக்கு உட்படுகின்றன. ஆய்வின் போது பிறதிணைப்பாடல்களிற் சில ஒப்புமைக்கு உதவுவன ஆகும்.

அ முல்லைத்திணையாய்வு :

சங்கப்பாடல்களின் தொகை 2381 என்றும் அவற்றைப் பாடியோர் 473 புலவர் பெருமக்கள் எனப் பட்டியலிட்டுச்சொல்வார் முனைவர். மு. வ. அவர்கள்.[1] அவற்றுள் முல்லைத் திணைக்குட்படும் பாடல்கள் 234 என்றும் பாடிய புலவர் எண்ணிக்கை 73 எனக் கூறுவர் முனைவர். ந. ஜெயராமன்[2] பரிபாடலில் ஒரு பாடலும் முல்லைக்குரியதென்றும் கூறுப. முன்னரே குறிப்பிட்டவாறு, தொகுக்கப் பெற்ற பான்மை முல்லையின் உரிப்பொருளாய ''இருத்தல்'' எனும் நிமித்தத்தை அடித்தளமாய்க்கொண்டமைந்துள்ளதாம். இவற்றுள் 105 பாடல்கள் முற்றிலும் உரிப்பொருள் தலைமை கொண்டவையாயிருப்பதால் ஆய்வுக்குள் வரவில்லை. எஞ்சிய 129 பாடல்களே ஆய்வின் அகலத்துள் கிடப்பன.

முல்லைத்திணைக்குரிய காலம் ''கார்'' என்றும் அக்காலம் ஆவணி மற்றும் புரட்டாசி மாதங்களே எனவும் கொள்ளுதல் இது காறும் உள்ள மரபு. அதனையே முடிந்த முடிபாகவும், அதனையொட்டி, முதற்பொருளின் ஒரு கூறான ''பொழுதின்'' அதனுள் 'பெரும்பொழு' தின் 'முதற்பருவமாய ''கார்'' காலத்தை மட்டுமே எல்லாப்பாடல்களும் (129 பாடல்கள்) சுட்டுகின்றன என்றும் கொள்வது ஏற்புடைத்தாய் உள்ளதாய் என்பதே ஆய்வு.

---

1. பழந்தமிழிலக்கியத்தில் இயற்கை-முனைவர் மு. வரதராசன்
2. முல்லைப்பாடல்கள்-முனைவர் ந. ஜெயராமன்

இது போழ்து, இன்றைய பூவியல், வானியலறிவியற் கருத்துக்கள் ஒப்பாய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறுகின்றன.

பூவியல் அடிப்படையிலும் வானியல் அடிப்படையிலும் பாரதநாடு பொதுவாக பருவக்காற்று நாடு (MONSOON COUNTRY) என அழைக்கப்பெறுகின்றது. தமிழகமும் அதில் அடக்கம். ஏனெனில் இன்றியமையாததாகிய நீரின் வரவு, இந் நாட்டில் பருவக்காற்றுகள், காலத்தில், வீசுவதையொட்டியே அமைந்துள்ளதாதலால், பருவக்காற்றுகட்குச் சிறப்பிடங் கொடுக்கப்பெற்றுள்ளது. அவை, தென்மேற்குப் பருவக்காற்று மற்றும் வடகிழக்குப் பருவக்காற்று என்று அழைக்கப்பெறுவது அறிந்த உண்மையே. அவை வீசுங்காலம் முறையே ஆங்கில மாதங்களான ஜுன் முதல் செப்டம்பர் வரையும் அக்டோபர், நவம்பர் மாதங்களும் ஆகும். எவ்வாறு ''வேனிற்'' பருவத்தை யடுத்து ''கார்'' காலம் வருதல் இலக்கியத்தில் குறிக்கப்பட் டுள்ளதோ, அதே போன்று 'கோடை' காலம் என இப்போது கூறப்படும் ஏப்ரல்—மே மாதங்களை அடுத்து வருவது தென் மேற்குப் பருவக்காற்றுக்காலம் எனக் கூறப்பெறுகின்றது. தென் மேற்குப் பருவக்காற்று தொடங்கி மழை பெய்வது ''ஜுன்'' மாதத்தில் எனில் அது தமிழ் மாதப்பகுப்பில் 'ஆனி' மாதத்தைக் குறிப்பதாகவும், ''ஆனி—ஆடி'' இலக்கிய மரப்புப்படி 'முது வேனில்' எனக் கூறப்படுகின்றது. ஆக தென்மேற்குப் பருவ மழை ''ஆனி - ஆடியிலேயே தொடங்கி ''ஆவணி-புரட்டாசி'' மாதங்களில் முடிகின்றதெனலாம். இலக்கியத்திற் கூறப்பெறும் ''கார்'' காலம் தென்மேற்குப் பருவக்காற்றின் பிற்பகுதியாகும்.

தென்மேற்குப்பருவக்காற்று உருவாவதன் காரணம், வருவகை, திசை பற்றி நோக்கின், பாரதத்தின் வடபகுதியில் 'ஏப்ரல்–மே' திங்கள்களில் கடுங்கோடையினால் குறைவான காற்றமுத்த மண்டலம் உருவாகின்றது. ஆகவே அதனை நிரப்ப, பாரதத்தின் தென்மேற்கில் இந்துமாக்கடலில் உள்ள 'மடகாசுகர்' தீவுக்குழுமத்திற்கு அருகில் ஏற்படும் உயர்காற்றமுத்த மண்டலம் வடகிழக்காக பாரதத்தை நோக்கி வீசத்தொடங்குகின்றது. அக் காற்றோட்டம் இருகிளைகளாக பாரத்தில் நுழைகின்றது. ஒரு கிளை அரபிக்கடல் வழியாகவும் மற்றொன்று வங்கக்கடல் வழியாகவும் வடபாரதத்தை நோக்கிச் செல்கின்றன. அவற்றுள் அரபிக்கடல் வழியாக வரும் காற்றோட்டம் மேலும் இரு

கிளைகளாகப்பிரிந்து ஒன்று நேர் வடக்கில் குசராத் கடற்கரை, மராட்டியக் கடற்கரை வழியாக இமயமலைச்சாரலில் வடக்கு, வடமேற்குப் பகுதி வரை சென்று மழையைப் பொழிவிக்கிறது. மற்றொன்றுகிழக்காகத் திரும்பி கேரளம் மற்றும் கருநாடகக் கடற்கரைப்பகுதிகளில் வீசுகின்றது. கடல்வழி வரும்போழ்து நீர் முகந்து வரும் அக்காற்று கேரளத்துக்கும் தமிழகத்துக்கும் இடையில் நெடிதுயர்ந்து நிற்கும் மேலமலைத்தொடரால் தடுக்கப்பெற்று கேரளப்பகுதியில் பெருமழையைத் தந்துவிட்டு தமிழகம் நுழையும்போது வறண்ட காற்றாகவே வீசிச் செல்லுகின்றது. தமிழகத்தில், கன்னியாகுமரிப் பகுதி, செங்கோட்டைப் பகுதி மற்றும் மேலமலைத்தொடரின் உயர் பகுதிகள் ; ஆகியவற்றில் மட்டும் ஓரளவு மழையைப் பொழிந்து செல்கின்றது. தமிழகத்தின் மையப்பகுதி மற்றும் கிழக்குப்பகுதியில் விரைவான காற்றோட்டமாகவே சென்று வங்கக்கடலை அடைந்து வங்கக்கடல் வழியாக வருகின்ற கிளைக் காற்றோட்டத்துடன் இணைந்து வடக்கு வடகிழக்குத் திசைகளில் வடபாரதத்தின் வடகிழக்குப்பகுதியில் மழையைப் பொழிவிக்கின்றது. இம்மழைப்பெழிவு ஆகஸ்டு— செப்டம்பர் மாதம் வரை மட்டுமே நிகழ்கின்றது. அதனிடையில் தென்னகத்தில் குறைஅழுத்த மண்டலம் ஏற்படுவதால், வடக்கே, கிழக்கே, வடகிழக்காக முன்னேறிச்சென்ற காற்று (Advancing Monsoon) வங்கக்கடல் வழியாக தெற்கில் திரும்பி ஒரிசா, ஆந்திர, தமிழ் மாநிலங்களை நெருங்கும்போது கிழக்கில் திரும்பி பெருமழையைப் பொழிந்து தெற்காய் இந்துமாக்கடல் சென்று சேர்கின்றது. திரும்பிவரும் (Retreating Monsoon) பருவக் காற்றினை வடகிழக்குப்பருவக்காற்று என்றும் அது பொழி மழையை வடகிழக்குப் பருவகாற்று மழை எனவும் குறிப்பர். இது பொழிகாலம் அக்டோபர் - நவம்பர் - டிசம்பர் மாதங்களாகும். அவை 'கூதிர்' காலம் எனக் கூறப்பெறும் ஐப்பசி - கார்த்திகை மாதங்களையும் தொடர்ந்து வரும் முன்பனிக் காலத்தையும் குறிப்பதாய்க் கொள்ளலாம். தென்மேற்குப் பருவக்காற்று வீசு வகையினை கடிகார எதிர்ச்சுற்று (Anti Cyclic) எனவும் வடகிழக்குப்பருவக்காற்று வீசு வகையினை கடிகாரச்சுற்று (Cyclic) எனவும் கூறுவர். தமிழில் முன்னதை "குணக்கேர்பு" எனவும் பின்னதை "வலவேர்பு" "குடக்கேர்பு" எனவும் குறிக்கின்ற தென்பது பின்னர் விளக்கம் பெறும். இவற்றைப்பற்றி பேசும் பொழுது ஆடியில் மதுரை மாவட்டத்துக் கம்பம் பள்ளத்தாக்கு

மற்றும் நெல்லைமாவட்டத்துக் குற்றாலப்பகுதி ஆகியவற்றில் வரும் ''ஆடிச்சாரலை'' நினைவு கொள்ளின் தென்மேற்குப் பருவக்காற்றின் முற்பகுதியில் தமிழகத்தில் ஒருசில பகுதிகளில் சாரல் மழை மட்டுமே பெய்வதனையும் அதே காலத்தில் கருநாடக மாநிலப் பகுதி மேலமலைத் தொடர்களில் பெருமழை பெய்து காவிரியில் ''ஆடிப்பெருக்கு'' நினைவுகூர்தல் நன்றாம்.

பழந்தமிழிலக்கியத்தில், குடக்கிலிருந்து வீசும் காற்றைக் கோடைவளி என்றும் தெற்கிலிருந்து வருவதைத் ''தென்றல்'' என்றும் கிழக்கிலிருந்து வீசுங்காற்றைக் ''கொண்டல்'' என்றும் வடக்கிலிருந்து வீசி வருவதை ''வாடை மற்றும் வடந்தைத்தண்வளி'' என்றும் அழைப்பதனைக் கண்டு மகிழ்வதோடு, அறிவியல் கண்கொண்டு நோக்கின், தென்மேற்குப் பருவக்காற்று மற்றும் வடகிழக்குப் பருவக்காற்று ஆகியவையே மேற்கண்ட பெயர்களால் சுட்டப்பெற்றுள்ளன எனும் உண்மை கண்டு உள மகிழலாம். பின்வரும் பகுதிகளில் அவைகட்கு சங்கப்பாடல்களிலிருந்தே அகச்சான்றுகள் எடுத்துக் காட்டப் பெறும்.

தற்போது முல்லைத்திணைப் பாடல்கள் மட்டும் ஆய்வில் கொள்ளப்பட்டுள்ளதால், அவற்றில் வரும் அத்துணைப் பாடல்களும் தென்மேற்குப் பருவக்காற்று மழையை குறிக்கின்றனவா அன்றி வேறு மழையையும் குறிக்கின்றனவா என்ற ஆய்வுச் சிற்றெண்ணமும் எழுந்தது. அதன் விளைவு, முல்லைத்திணைப் பாடல்களில் ''கார்'' மழை மட்டுமின்றி ''கூதிர்'' மழையாகிய வடகிழக்குப் பருவமழையும் தெள்ளத்தெளிவாகப் பாடப்பெற்றுள்ளன எனும் புதியசெய்தி வெளிப்படுகிறது. முதற்பொருளையும் கருப்பொருளையும் முதன்மையாகக் கொண்ட 129 பாடல்களில் ஆவணி, புரட்டாசி மாதக் கார்மழையைப் பாடியவை 96 என்றும் ''ஐப்பசி, கார்த்திகை'' மாதக் ''கூதிர்'' மழையைக் குறிக்கும் பாடல்கள் 33 என்றும் தெரியவருகிறது. பரிபாடலில் முல்லைப் பாடல் ஆகக்கொண்ட வையை யைப்பாடும் 20 ஆவது பாடல் தெளிவாக வாடை மழையையே பாடா நிற்கின்றது. இவ்வாறு பிரித்துணர்வதற்குப் போதிய சான்றுகள் அப்பாடல்களில் பயிலப் பெறும் சிறப்புத்தொடர்கள், சொற்கள் ஆகியவையே யாகும்.

வேனிலைத்தொடர்ந்து வருவது கார். இயற்கையில் மட்டுமன்றி இலக்கியத்திலும் அவ்வாறே வருகின்றது. வேனிலின்

வெம்மையால் மரம், செடி, கொடி, விலங்கு, புள்ளினங்கள் மட்டுமின்றி மாந்தரும் பெருந்துன்பம் எய்தி மயங்கும் வேளையில், பருவ மாறுபாடு காலத்தில் வந்து, முதன் மழை பெய்தவுடன், அனைத்தும் புத்தழகு பெற்றுப் பொலிவுபெறத் தொடங்குகின்றது. ஆகவே வேனிலுக்குப்பின் வரும் முதன் மழையை வரவேற்பதில் சங்கப்புலவர்கள் கவி மீதுரப்பெற்றுப்பாடிய பாடல்கள் நெஞ்சில் இன்பம் நிறைப்பனவாம். சிறு குழந்தைகள் எதிர்பார்த்தவை கிடைத்ததும் குதி செய்வது போல "கார்" வந்தமையை "கார் தொடங்கின்றே" எனவும். "பெயல் தொடங்கின்றே" பெயல் "தொடங்கிற்றே" எனவும் பல பாடல்களில் பாடி மகிழ்கின்றனர். இதோ பாடல்கள் :-

"வறந்த காலம் தவிர்ப்ப விசி கறங்கு
குரல் எழிலி கார் செய்தன்றே" (ஐங். 452)

"வேனில் நீங்கக்கார்மழை தலைஇ காடு
கவின் கொண்டற்று" (ஐங். 484)

"வான்பிசிர்க் கருவியிற் பிடவு முகை தகையக்
கான்பிசிர் கற்பக் கார் தொடங்கின்றே" (ஐங். 467)

"னாரிநுணல் கறங்கத், தேரை தெவிட்டக்
கார் தொடங்கின்றே" (ஐங். 468)

' ஏறுமுரண் சிறப்ப ஏறெதிர் இரங்க
மாதர் மான்பிணை மறியோடு மறுகக்
கார் தொடங்கின்றே" (ஐங். 412)

"தேர் செலவழுங்கத்திருவிற் கோலி
ஆர்கலி எழிலி சோர் தொடங்கின்றே" (ஐங். 428)

"அரசு பகைதணிய முரசு படச் சினைஇ
ஆர் குரல் எழிலி கார் தொடங்கின்றே" (ஐங். 455)

"கருவிவானம் பெயல் தொடங்கிற்று" (ஐங். 488)

"குறும்பல் கோதை கொன்றை மலர
நெடுஞ் செம்புற்று ஈயல் பகர
மாபசி பறப்பக் கார் தொடங்கின்றே" (ஐங். 497)

"ஆர்குரல் எழிலி அழிதுளி சிதறிக்
கார் தொடங்கின்றே" (ஐங். 411)

"நின்னே போல மஞ்ஞையாலக்
கார் தொடங்கின்றே" (ஐங். 413)

"இலையில் பிடவம் ஈர்மலர் அரும்பப்
பொன்னெனக் கொன்றை மலரப் பனிஎனப்
பன்மலர்க் காயாக் குறுஞ்சினை கஞல
கார் தொடங்கின்றே" (நற் 242)

"ஆர்பெயல் உதவிய கார்செய் காலை" (அக 314)

"கழல் குறழ் ஆலியொடு கதழுறை சிதறிப்
பெயல் தொடங்கிற்றால்" (அக. 334)

"அருவி மாமலைத் தத்தக்
கருவி மாமழைச் சிலை தரும் குரலே" (குறு 94)

"பருவம் செய்த கருவி மாமழை" (நற் 238)

கார் எனுஞ் சொல்லிற்கு இருபொருள் கொள்ளப் பெருகின்றது. "கார்" எனும் மழைப் பருவத்தை மட்டுமின்றி மழைபொழி மேகங்களையும் அது குறிக்கும். மேகங்களைக் குறிக்கும் மற்றொரு சொல் 'எழிலி' என்பதாகும். மேகங்கள் திரள் திரளாக வருவதை 'கருவி' எனும் சொல் குறிக்கின்றது. வேனிலை அடுத்து வரும் மழை காலமானதால், மழை பெய்யுங்கால் தோன்றுகின்ற அழகிய வானவில் தோற்றத்தினை "திருவில்" என்றே குறிப்பர். அது மட்டுமின்றி கோடையை அடுத்து வருமழை 'ஆலங்கட்டி' மழையாகப் பொழிவதுமுண்டு அதனைக் குறிக்க 'ஆலி'யொடு வந்ததெனக் குறிப்புமுண்டு. இன்னொரு புதிய செய்தி அறிவியற்சார்புடைய நற்செய்தி என்னவெனில் ஒவ்வொரு பருவகாலத்திலும் குறிப்பிட்ட நிலையுயிர்கள், தம்மில் தளிர்தோன்றுதல், மலர் அரும்புதல், முகைவிடுதல். முகை அவிழல், காய்தோன்றல், கனி முதிர்தல் ஆகிய வள்ர் பருவ (Phenologican) மாறுபாடுகளைக்காட்டுவன. தோன்றிய காலந்தொட்டு இன்று வரையும் அப்பருவகால மாறுபாடுகள் மாறாமல் அந்தந்தப் பருவகாலங்களில் ஏற்படுவது இயற்கை யன்னையின் நிலையான கன்னிமைத்தன்மையாம். ஆக அவற்றைக்கண்டு இன்றும் இது இன்ன பருவம் எனத்தெரிய இயலுகின்றது. இச்செய்தி பின்னோரிடத்தில் பெரிதும் விளக்கப் பெறும்.

தொடரும்